# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை ☐ இதழ் 12 ☐ ஏப்ரல் 2003 ☐ ISSN 1474 - 8770 ☐ விலை £1.00, EUR 2.00

"சீரற்ற, திறனற்ற, ஊழல் நிறைந்த" நீதி மன்றின் தீர்ப்பு - 01

நூலகத் திறப்பு விழா ஒரு அரசியல் சதுரங்கம் - 02

சட்டத்தரணி ரங்கனுடன் நேர்காணல் MARAN V TR-TEC - 05

ஐரோப்பிய குறும்பட விழா - 10

ஈழத்து அரசியற் படுகொலைகள் அடுத்த அடி என்ன? - 12

27,000 தமிழர்களுக்குத் தஞ்சம் மறுப்பு போராட்டத்துக்குத் தயார் - 15

தமிழ் அகராதிகள்: மொழியும் மக்களும் தனித்து இயங்க முடியாது - 17

தெளிவு - 19

வள்ளுவன் காதல் - 20

வரலாறு: குத்து மதிப்பாக எழுதப்படும் ஒன்றல்ல - 21

பாரிஸ் இலக்கிய மாலை - 23

நூல் தேட்டம் - 24

வீரசிங்கம் மண்டபம் முதல் லொய்ட்ல் பார்க் வரை
தமிழ் அவைக் காற்றுக் கழகம் - அட்டை உட்பக்கம்

ஈழவர் திரைக் கலை மன்றம் - பின் அட்டை உட்பக்கம்

நிகழ்வுகள் - பின் அட்டை

## TR -TEC - LCT சில ஆதாரங்கள்

Companies House
— for the record —

Company Name
**LONDON COLLEGE OF TECHNOLOGY LIMITED**

Company Type
**Private Company Limited By Shares**
Company Number
*3930079*
Information extracted from Companies House records on
**2nd February 2002**

Ref: 3930079/03/10

**Current details**

> **Shareholder**
> **Name**
> **Kathirgonalamby JAGESMORAN**

**Address**
**39 Sherrington Avenue**
**Middlesex**
**4QU**

**Shares held**

| *Class* | *Number* |
|---|---|
| **Ordinary** | **1** |

> **Shareholder**
> **Name**
> **Nadasejah REGUNALHAN**

**Address**
**82 Boundary Road**
**London**
**2AX**

**Shares held**

| *Class* | *Number* |
|---|---|
| **Ordinary** | **1** |

### Company Director

**Name**
**Nadarajah RAGUNATHAN**

**Address**
**82 Boundary Road**

**London**
**2AX**

**1. Declaration**

☑ I confirm that the details in this annual return are correct as at the made-up-dat (shown at 2 below). I enclose the filing fee of £15.

Signature ______ (Director / Secretary)
Appiah SRITHARAN

Date 19/02/200.
*This date must not be earlier tha return date at 2 below*

**நீதி மன்றத்தின் எழுத்து மூலமான தீர்ப்பு**
**பொது ஸ்தாபனங்களின் ஆணைக்குழுவின் தீர்ப்பு**
**அடுத்த இதழில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீரசிங்க மண்டபம் முதல் லொய்ட்ஸ் பார்க் தியட்டர் வரை

# தமிழ் அவைக் காற்றுக் கழகம்

த ஜெயபாலன்

கிழக்கு இலண்டன் வோல்தம்ஸ்ரோ, லொய்ட்ஸ் பார்க் தியட்டரில் வெள்ளி விழாக் காணும் தமிழ் அவைக் காற்றுக் கழகத்தின் நாடக விழா பெப்ரவரி 8ம் திகதி நடைபெற்றது. 200க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்ட இந்த நாடக விழாவில் அவைக் காற்றுக் கழகத்திற்கென உறுதியாக வளர்க்கப்பட்ட பல கலை ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். 7 ஆண்டுகளுக்கு முன் 1996ல் அவைக் காற்றுக் கழகத்தின் நாடகங்கள் புரியாத புதிராக விளங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது. ஆனால் இன்று இந்நாடகங்களைப் பார்க்கும் போது மனம் விட்டு சிரித்து ரசிக்கக் கூடியதாக இருந்தது. இதற்கு எனது ரசனையும் அறிவு முதிர்ச்சியும் காரணமா அல்லது சாதாரண மக்களுக்கும் விளங்கும் வகையில் நாடகங்கள் உருவாக்கப்பட்டு உள்ளதா என்பது தெரியவில்லை.



க பாலேந்திரா

1978ல் யாழ் வீரசிங்க மண்டபத்தில் ஆரம்பித்த அவைக் காற்றுக் கழகத்தின் கலைப் பயணம் நான்கு ஆண்டுகளுக்குப் பின் இலண்டனுக்குப் புலம்பெயர்ந்தது. 1985ல் இலண்டனில் முதலாவது மேடையேற்றம் நிகழ்ந்தது. இலங்கையில் அந்த 4 ஆண்டுகளில் 100க்கு மேற்பட்ட மேடையேற்றங்களைச் செய்து ஈழத்து நாடகக்கலையில் அவைக் காற்றுக்கழகம் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்த உள்ளது. யாழ் நாடகத்துறையில் ஒரு வகை விழிப்புணர்ச்சி தோண்றி இருக்கிறது என்றால் அதற்கு வழிவகுத்தவர்கள் அவைக் காற்றுக் கழகத்தினர் எனக் குறிப்பிடுகிறார் ஏ ஜெ கனகரத்தின. இன்று ஐரோப்பா, கனடா, அவுஸ்திரெலியா என சர்வதேச அளவில் நூற்றுக்கும் மேற்பட்ட மேடையேற்றங்கள் நிகழ்த்தப்பட்டு உள்ளது.



பா ஆனந்தராணி

ச சஞ்சீவ்ராஜ், சி சிவசுதன், ச வாசுதேவன், க கிருஷ்ணராஜா, பா ஆனந்தராணி ஆகியோர் நடித்த 'காத்திருப்பு' முதலில் மேடையேற்றப்பட்டது. இலங்கையில் காணமல் போன ஆயிரக்கணக்கான இளைஞர்களின் சோகத்தை மேடைக்கு முன் கலைஞர்கள் கொண்டுவந்து நிறுத்தினர். மரணம் கொடியது. காணாமல் போவது அதைவிடக் கொடியது. இதனால் பெருமளவு பாதிக்கப்படுவது தாய்மையே. அந்த ஆயிரக்கணக்கான தாய் தந்தையரை திலகமும் மணியமுமாகத் தோண்றிய ஆனந்தராணியும் பாலேந்திராவும் மனக் கண் முன் நிறுத்தினர்.



கெ கெ ராஜா

மூன்று நாடகங்களிலும் கண்ணாடி வார்ப்புகள் சற்று நீண்டதாக அமைந்திருந்ததை உணரக் கூடியதாக இருந்தது. வி சிவசுதன், ச வாசுதோவன், க தர்சினி, பா ஆனந்தராணி ஆகியோர் நடித்த இந்த நினைவு நாடகம் ஜெகனின் (ச வாசுதேவன்) குடும்பத்தின் நிறைவேறாத ஆசைகளுக்கு வடிவம் கொடுத்து நாடகமாக்கப்பட்டுள்ளது. நாடகத்தில் கணவனால் கைவிடப்பட்ட தாய்க்கும் (ஆனந்தராணி) சப்பாத்துக் கடையில் வேலை செய்யும் ரசனைகளைச் சிதைத்து வாழும் ஜெகனுக்கும் இடையில் நடக்கும் சம்பாசணைகள் தத்துருபமாகவும் அதே சமயம் பார்வையாளர்களைச் சிரிக்கவும் வைத்தது. இதில் இரண்டு முரண்பட்ட உணர்வுகளும் அழகாக கலைஞர்களால் வெளிப்படுத்தப்பட்டது. அதில் ஜெகனின் அக்காவுக்கும் (க தர்சினி) விருந்தாளி ரமேஸ்க்கும் (சிவசுதன்) இடையே உருவாக்கப்பட்ட சம்பாசனை சற்று இயல்பாக இருக்கவில்லை. அவர்களது சம்பாசணையின் நேரத்தை பெருமளவு குறைத்திருந்தால் காட்சிகள் விறுவிறுப்பாக நகர்ந்திருக்கும். ரமேஸ் ஒரு வாத்தியாராக பாடம் நடத்துவது போல் அமைந்திருக்காது. அவ்விரு கலைஞர்களதும் முகபாவமும் நடிப்பும் நன்றாகவே அமைந்திருந்தது.



சு வாசுதேவன்

இறுதியாக மேடையேறியது வேருக்குள் பெய்யும் மழை. இதில் சரிதா அண்ணாத்துரை, பா சத்தியேந்திரா, பா ஆனந்தராணி, ச வாசுதேவன் ஆகியோர் நடித்திருந்தனர். ஒரு தனிநபர் முதல் சர்வதேசம் வரை சுயநல நோக்கங்களுக்காக ஒன்றுமே அற்ற ஒரு விடயத்தை பூதாகாரமாக்கி காட்டி தமது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதை மிகவும் நகைச் சுவையுடன் கலைஞர்கள் மேடையில் காட்டினர். எண்ணைக்காக உருவாக்கப்பட்டு வரும் ஈராக் யுத்தம் சூடு பிடித்துள்ள நிலையில் ஒரு சர்வதேசப் பிரச்சினையையும் CNN போன்ற ஊடகங்களின் பாத்திரத்தையும் காட்டி சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது இந்த நாடகம்.



பா சத்தியேந்திரன்

சாந்தகுணம், மானசி, சூரியகுமார் மற்றும் சிலர் மேடையமைப்பு, ஒலியமைப்பு, ஒளியமைப்பு ஆகியவற்றில் திறம்படச் செயற்பட்டனர். இந்த மூன்று நாடகங்களையும் க பாலேந்திரா அழகாக நெறியாள்கை செய்துள்ளார். ஒவ்வொரு தடவையும் நாடகங்களை மேடையேற்றும் போதும் பார்வையாளர்களிடம் ஒரு கருத்துக் கணிப்பை எடுத்து குறித்த நாடக(ம்)ங்கள் சொல்ல வந்த செய்தியை மக்களிடம் கொண்டு செல்கிறதா, கலைஞர்களின் நடிப்பு, மேடையமைப்பு, ஒளியமைப்பு, இசை இவற்றைக் கவனத்தில் எடுப்பது நாடகத்தை நெறிப்படுத்துபவருக்கும் கலைஞர்களுக்கும் புதிய எண்ணக் கருக்களைக் கொடுக்கும். மேலும் கலைஞர்களுக்கும் பார்வையாளனுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும் உதவும். அவைக் காற்றுக் கழகத்தின் நாடகங்கள் புத்திஜீவிகளுக்கு மட்டும் அல்ல அது சராசரி தமிழ் மகனுக்குமானதாக தொடர்ந்தும் அமைய வேண்டும்.



சஞ்சீவ்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சீரற்ற, திறனற்ற, ஊழல் நிறைந்த...." நீதிமன்றின் தீர்ப்பு

சீரற்ற, திறனற்ற, ஊழல் நிறைந்த தமிழ் அமைப்புகள் என்ற தேசத்தின் (இதழ் 10) கட்டுரையை பெப்ரவரி 11 திருமாறன் V TR-TEC வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பு மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தி உள்ளது. முகாமையாளர் அ சிறிதரனின் முகாமைத்துவமும் அறக்கட்டளையின் நிர்வாகத்திறனும் மதிப்பிழந்துள்ளது. ஒகஸ்ட் 2ல் நடைபெற்ற வழக்கில் ஆர் ஜெயதேவன் என்பவரின் நிர்வாகத்தில் இருந்த TCHA என்ற தமிழர் வீடமைப்புக் கழகம் ஒரு சீரற்ற, திறனற்ற, ஊழல் நிறைந்த அமைப்பு என்பதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. ஏப்ரல் 17 வழக்கில் ஜெயதேவன் பதவிக்கு வந்தமுறை கேள்விக்கு உள்ளானது.

மேலும் 'TCHA என்ற தமிழர் வீடமைப்புக் கழகமும் TRTec என்ற தமிழர் ஸ்தாபனமும் பொறுக்கி எடுத்த குப்பைகள்' என அண்மையில் வெளியான (ஆர் ஜெயதேவன், இந்திரகுமார் ஆகியோர் பின்னணியில் உள்ளார்கள் என நம்பப்படுகிறது.) ஒரு பிரசுரத்தில் அவர்களே ஒப்புக் கொண்டும் உள்ளனர். (அப்பிரசுரத்தில் யார் எழுதுகிறார்கள் போன்ற விடயங்கள் குறிப்பிடப்படவில்லை. அதாவது ஒரு மொட்டைப்பிரசுரம்)

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு சேவை செய்வதற்காக சராசரியிலும் அதிகமாகச் சம்பளம் பெறும் (30,000++ பவுணிற்கு மேல்) இவ்விரு அமைப்புகளினதும் நிர்வாகத்தினர் தாம் சார்ந்த அமைப்புகளைச் செயற்திறன் மிக்கதாக்க பாடுபட்டிருக்க வேண்டும். அந்தத் திறனும் தகுதியும் இல்லை என நீதி மன்றத்தில் நிரூபிக்கப்பட்ட பின்னரும் தங்கள் பதவியைக் காப்பற்றிக் கொள்ளவதற்காக மற்றையவர்கள் மீது சேறு பூசுவதும் அரசியல் சாயம் பூசுவதும் அருவருப்பான அம்சங்கள். இதைவிடுத்து சுட்டிக் காட்டப்படும் தவறுகளைத் திருத்தி பெறும் சம்பளத்துக்கு நியாயமான சேவையை வழங்க இவர்கள் முன்வர வேண்டும்.

தமிழ் ஸ்தாபனங்களில் உள்ள சீரற்ற, திறனற்ற, ஊழல் நிறைந்தவர்கள் ஒர்நாள் அவ்வமைப்புகளில் இருந்து விரட்டப்படுவார்கள் என்பது தேசத்தின் நம்பிக்கை. தேசம் ஒரு நடுநிலையான சஞ்சிகை அல்ல. தேசம் எப்போதும் உண்மையின், நீதியின் பக்கம் நிற்கும். உண்மையை அறியும் வரை நடுநிலையைப் பேணும்.

உண்மைகள் எப்போதும் உறங்குவதில்லை. அப்படி உறங்கினால் எமது ஊடக நண்பர்களுடன் இணைந்து அதனைத் தட்டி எழுப்ப தேசம் தயங்காது. தேசம் சஞ்சிகை பற்றிய காத்திரமான விமர்சனங்களை வரவேற்கிறோம் வசைபாடினாலும் அன்னத்தைப் போல் அதில் நல்லவை இருக்குமா எனத் தேடிப்பார்ப்போம். எமக்குத் தொடர்ந்து ஆதரவளித்து வரும் ஐபிசி, சன்றைஸ் வானொலிக்கும் தீபம், சிஜரிவி தொலைக்காட்சிக்கும் இலங்கை, மலேசிய ஊடகங்களுக்கும் உதயன் பத்திரிகைக்கும் நாம் அறியாமலேயே ஆதரவு வழங்கி வரும் ஏனைய ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்


**தேசம் பத்ரி**

பிரதம ஆசிரியர் - த ஜெயபாலன்

(0044) (0)20 8279 0354

நிர்வாக ஆசிரியர் - என் செல்வராஜா

( நூலகவியலாளர் )

(0044) (0)15 8270 3786

ஆசிரியர் குழு

தொழில்நுட்ப உதவி எஸ் கௌதமன்

THESAM
P.O.Box 35806
London, E11 3JX
United Kingdom
Fax : 020 8534 0797
thesam97@hotmail.com

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி 17, 2003 அன்று பதவிக்காலம் முடிந்த நிலையில் சுமுகமாகக் கலையப்படவிருந்த யாழ் மாநகரசபையின் ஆயுள்காலம் பெப்ரவரி 13, 2003 அன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. முதல்வரினதும் ஏழு சக உறுப்பினர்களினதும் பதவி துறப்பினையடுத்து நீண்ட சர்ச்சைக்குரியதாய் அமைந்த நூலகத் திறப்பு விழா இரத்துச் செய்யப்பட்டு விட்டது. அதையடுத்து போராட்டங்களும் கைவிடப்பட்டுவிட்டன. மீண்டும் ஒரு திறப்பு விழாவை எதிர்பார்த்து அந்த நுலகம் காத்திருக்கப் போகின்றது. அடுத்த திறப்புவிழா நாடகத்தை யார் அரங்கேற்றப் போகின்றார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம். அதற்கு முன் இக்கட்டுரையைப் பார்ப்போம்.

# நூலகத் திறப்புவிழா
# ஒரு அரசியல் சதுரங்கம்



என் செல்வராஜா
நூலகவியலாளர்

யாழ் பொதுசனநூலகத்தின் திறப்பு விழா மீண்டும் பிற்போடப்பட்டு விட்டது. 15 வருட கால ஆழ்நிலைத் தூக்கத்திலிருந்த இலங்கை அரசு திடீரென விழித்துக்கொண்டு புத்தகமும் செங்கல்லும் என்ற பதாதையுடனும் 80 கோடி ரூபா நிதி ஒதுக் கீட்டுடனும் யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை மீளக்கட்டி எழுப்பித் தமிழர் நெஞ்சங்களைக் கவர ஏப்ரல் 10, 1997இல் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து முடிவு செய்தது.

1981 மே மாத இறுதித் தினத்து நள்ளிர வில் கள்வர் போல வந்து எரித்துச் செல்லும் போது இலங்கை (ஜே ஆர்)அரசு அதை வெறும் கட்டிடத் தொகுதியாகக் காணவில்லை. அதை யாழ்ப்பாண த்து மக்களின் இதயமாகவே கண்டார்கள். அந்த இதயம் வெடித்துச் சிதறும் என்று கண்டார்கள். ஆனால் அந்தச் சாம்பலிலிருந்து பீனிக்ஸ் பறவை போலப் புது வேகத்துடன் உயிர்த்தெழுந்து சர்வ தேசத்தின் கவனத்தையும் அது கவர்ந்து அதன் மூலம் தன்னைச் சுற்றி ஒரு அரசியல் ஒளி வட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு உலகத்தின் பார்வைக் குவியமாக மாறிவிடும் என்பதனை அன்று அந்தத் தீக்குச்சியை உரச ஆணையிடும் போது போது அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.

அரசியல் மயப்படுத்தப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தின் கட்டிடப் புனரமைப்பு ஆரம்பத் திட்ட மிடலில் இருக்கும் போதே அரசு (பொதுஜன ஐக்கிய முன்னணி) திறப்புவிழா ஒன்றை மேடை யேற்றி நடாத்திவிட்டது. யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பாகச் சர்வதேச அரங்கில் தன்னை நியாயப்படுத்திக்கொள்ள அவசர அவசரமாக யாழ் கச்சேரிக்கு எதிரிலுள்ள வீடமைப்பு அதிகார சபையின் மூன்று மாடிக் கட்டிடத்தின் தரைத்தளம் மாத்திரம் திருத்தப்பட்டு 1998 தைப்பொங்கல் நாளில் அமைச்சர்கள் மற்றும் இராணுவத்தினர் புடைசூழ தபால்தந்தி மற்றும் வெகுஜனத் தொடர்பு அமைச்சராகவிருந்த மங்கள சமரவீரவினால் தற்காலிக நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

பின்னர் படிப்படியாக நூலகக் கட்டட வேலைகள் பிசுபிசுத்துப்போய் அதற்கென ஒதுக்கப் பட்ட நிதியெல்லாம் ஆங்காங்கே கசிய ஆரம்பித்தது. பின்னர் அரசு கைமாறியதும் திருத்த வேலைகள் மீண்டும் உத்வேகம் எடுத்தது. யாழ்ப்பாண மாநகர சபையின் ஒரு சிறு பிரிவினரும் யாழ் மக்களும் அந்த நூலகத்தைப் புனரமைப்புச் செய்யாது அப்படியே நினைவுச்சின்னமாக வைத்திருந்து பாது காக்க வேண்டும் என்று விடுத்த வேண்டுகோள்கள் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று.

கட்டட வேலைகள் மாநகர சபையின் கட்டிடப் பிரிவினரிடம் கையளிக்கப்படாது அரசாங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவின் நேரடி மேற் பார்வையில் நடைபெற்றது. அரச கட்டிடத் திணைக் களம் புனரமைப்பிற்கு 120கோடி ரூபா வரையில் செலவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. புனர மைப்புப் பணிகளின் போது யாழ்ப்பாண மாநகர சபையினர் வெறும் ஆலோசனை வழங்கும் மட்டத் திலேயே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலை யில் அரசுக்கும் யாழ். மாநகரசபைக்கும் இடையில் நூலகத்தின் மேலான ஆளுமை தொடர்பான இழுபறிநிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் கடந்த ஆண்டு வெசாக் பண்டிகைக்கு முன்னர் நூலகத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்று புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்த்துகை அமைச்சர் கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன அவர்கள் துரிதப்படுத்தியிருந்தார். அது கட்டிட வேலைகள் இழுத்தடிக்கப்பட்டமையால் கை கூடவில்லை.


மாபெரும் அரசியல் விழாவாக பிரதமமந்தி ரியினால் இந்நூலகம் திறந்து வைக்கப்பட்டு யாழ்ப்பாணத்து மக்களிடம் கையளிக்கும் நோக் குடன் அவசர அவசரமாக இறுதிக்கட்ட கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதே சமயம் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற நிர்வாகத்தின் ஆயுள்காலம் முடிவுக்கு வரும் பெப்ரவரி 17ம் திகதியும் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

இந்நிலையில் யாழ் மாநகரத்தின் 24வது முதல்வராக கடந்த ஆண்டு ஜனவரி 16இல் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. செல்லன் கந்தையனும் அவரது சபை உறுப்பினர்களும் தமது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னதாக பெப்ரவரி 14, 2003 வெள்ளிக் கிழமை யாழ்ப்பாணத்து நூலகத்தைத் திறந்து வைப்பதென அவசர அவசரமாக முடிவு செய்தனர். நூலகத் திறப்பானது தமது மாநகராட்சிக் காலத்தை வரலாற்று முக்கியமானதாகப் பொறித்து வைக்கும் என்ற அவர்களது நம்பிக்கை அந்த அவசர முடிவிற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

மாநகரசபையை நிர்வகிக்கும் முதல்வர் சார்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினது தலைவரும் கூட்டமைப்பின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி நூலகத்தைத் திறந்து வைப்பதாக முடிவாகி இருந்தது. அரசியல் ஆதாயம் கருதி இந்த முடிவு எடுக்கப்படுவதாக வெளிப்படையான விமர்சனங்கள் அறிக்கைகள் தாயக ஊடகங்களில் வெளிவந்தன.

கட்டிடவேலைகளில் சிற்றுண்டிச்சாலை மற்றும் லிப்ட் வசதிகள் முடிவுறாத நிலையில் நூலகக் கட்டிடத்தைத் திறந்து வைப்பதில் என்ன நன்மை உள்ளது என்பதே பிரதான குற்றச்சாட்டாக அமைந்தது. நூலகம் என்பது வெறும் கட்டிடத் தொகுதி அல்ல. அதன் உள்ளே உள்ள வளங்க ளும் சேவைகளுமே நூலகமாகும். வெறும் கட்டிடத் தை திறந்து வைப்பதென்பது நூலகத்தைத் திறந்த தாகாது. கட்டடம் பூர்த்தியடைந்து மின்சார, தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்தி, தற்காலிக கட்டிடத்திலுள்ள நூல்களையும் புனரமைக்கப்பட்ட நூலகத்திற்காகக் காத்திருக்கும் 33 கணணிகளையும் பொருத்தி, போதிய ஆளணியுடன் நூலகத்தைத் திறந்து வைக்கத் தீர்மானித்திருந்தால் இச்சர்ச்சை க்கு இடமிருந்திராது என்பது தாயகத்தில் பொது அமைப்புகளினதும் மாணவர் அமைப்புகளினதும் கருத்தாக இருக்கின்றது.

பெப்ரவரி 10 2003 அன்று மாநகரசபையில் முதல்வர் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டின்போது நூலகப் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட 120 கோடி ரூபாவில் 99.1சதவீதமான புனரமைப்புப் பணிகள் முடிவடைந்து விட்டன எனவும் 14ம் திகதி நூலகம் திறக்கப்பட்டதும் 20ம் திகதி இதனை மக்கள் பாவனைக்கு விடுவதில் பிரச்சினைகள் இல்லை என்று கட்டடத் திணைக்களத்தினர் கூறியுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். முதல்வரின் மேற்படி செய்தியின் நடைமுறைச்சாத்தியம் பற்றிய சந்தேகம் அங்கே வெளிப்படையாகவிருந்தது.



பதவி விலகிய முதல்வர்
செல்லன் கந்தையா (இடம்)

நூலகத் திறப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்த யாழ் கல்வி மேம்பாட்டுப் பேரவை தன் அறிக்கை யில் யாழ் நூலகத்திற்கு குறைந்தபட்சமான பௌதிக வளங்கள், நூல்வளங்கள் என்பன கூட பூர்த்தி செய்யப்படாத நிலையில் அதனைத் திறப் பது நல்லதல்ல என்றும் வசதிகளற்ற நிலையில் நூலகம் திறக்கப்படுமானால் மீதி வேலைகள் நிறைவேற்றக்கால தாமதமாகும் என்றும் கூறியுள்ளது.

இந்நிலையில் கொழும்பிலிருந்து இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் தனது காரசார மான அறிக்கையில் மேயரையும் அவருக்குத் துணைபோனதாக நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜையும், தமிழர் கூட்டணி அரசியல்வாதி வீ ஆனந்தசங்கரியையும் சாடி, நூலகத்தை அரை

வேக்காடாகத் திறக்க முடிவெடுத்ததன் மூலம் தமிழினத்தின் உண்மையான விரோதிகள் இனங் காணப்பட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

விழா ஏற்பாடுகள் பூர்த்தியடைந்து அழை ப்பிதழ்களும் வழங்கப்பட்ட இந்நிலையில் நூலகத் திறப்பு விழா நாளான 14ம் திகதி யாழ் நூலகத்தின் முன்பாக பெரும் மறியல் போராட்டத்தையும் யாழ் மாநகரசபைப் பிரதேசத்தில் வர்த்தக நிறுவனங்கள், கூட்டுறவு அலுவலகங்கள் ஆகியவற்றை மூடிப் பூரண கதவடைப்பையும் மேற்கொள்ள பொது அமைப்புகளின் ஒன்றியம் பெப்ரவரி 11, 03இல் முடிவு செய்திருந்தது. மாநகரசபைப் பிரதேசத்தின் 30க்கும் மேற்பட்ட பொது அமைப்புகளின் பிரதி நிதிகள் கலந்துகொண்ட இந்நிகழ்வின்போது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து முதல்வர் தனது முடிவை கைவிடவேண்டும் என்றும் அது வேண்டுகோள் விடுத்திருந்தது.

நூலகம் எரிக்கப்பட்ட வேளை யாழ் மாநகர சபையின் ஆணையாளராயிருந்த சி.வி.கே. சிவஞானம் தற்போது யாழ். மாவட்ட நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவராக இருக்கின்றார். ஊடகவாயிலாக அவர் தனது கருத்தைத் தெரிவிக்கையில் உண்மையில் இந்த நூலகத்தைத் தமது பதவிக்காலத்துக்குள் திறந்து வைக்க வேண்டும் என மாநகரசபை சபை கருதி இருந்தால் முழு வேலைகளையும் பூர்த்தியாக்கு வித்து திறப்ப விழாவைச் செய்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் நாட்களைக் கடத்திவிட்டு அரைகுறையாக நூலகத்தைத் திறப்பது அவர்களுக் கும் கௌரவமல்ல தமிழினத்துக்கும் கௌரவமல்ல. யாழ் நூலகத் திறப்பு விழா எதிர்ப்புக்கும் போராட்டத்துக்கும் மத்தியில் நிகழ்ந்தது என்ற கறை படிந்த வரலாறு எமது நூலகத்திற்கு ஏற்பட வேண்டாம் என்றார்.

கூட்டணிப் பிரமுகரான வி.ஆனந்தசங்கரி மாநகர முதல்வரை ஆதரித்து திறப்பு விழாவில் பங்கேற்பதாக முடிவானபோது, அது கூட்டணியின் பிரதிநிதித்துவமாக அமையக்கூடாது என்பதில் ஆனந்தசங்கரி அக்கறையாக இருந்தமை அவரது அறிக்கையில் புலனாகின்றது.

"யாழ் நூலகத்தைத் திறந்து வைப்பதற் கான நடவடிக்கைகளை மாநகரசபை நிர்வாகமே மேற்கொண்டுள்ளது. அதற்கும் கூட்டணிக்கும் எவ் வித சம்பந்தமும் இல்லை. திறப்புவிழா கட்சிக்கு அப்பாற்பட்ட விடயம். மக்களால் தெரிவு செய்ய ப்பட்ட மாநகரசபை உறுப்பினர்கள் தன்னை மூத்த தமிழ் நாடாளுமன்ற அரசியல்வாதி என்று கருதிக் கூட்டாக விடுத்த வேண்டுகோளை ஏற்றுத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளச் சம்மதித்தேன்" என்று தெரிவித்தார் ஆனந்தசங்கரி.

அவரது கூற்றுக்குப் பதிலாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா விடுத்த அறிக்கையில் நூலகம் திறப்பது தொடர் பாக தமிழர் விடுதலைக்கூட்டணி இதுவரை கூடி ஆராயவுமில்லை, திறப்புவிழா தொடர்பான எந்த வழிகாட்டலையும் மாநகரசபைக்கு வழங்கவுமில்லை, மாநகரசபை இது பற்றிக் கலந்தாலோசித்ததாகத் தனக்குத் தெரியவுமில்லை என்று கூறியதுடன் இந்த நிகழ்வில் கலந்து கொள்வது அர்த்தமற்றதாகை யால் அதற்குத் தான் வரப்போவதுமில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநா யகமூர்த்தி தமது பங்கிற்கு முதல்வருக்கும் ஆனந்த சங்கரிக்கும் ஆலோசனை வழங்கும் பாணியில் முக்கியமான அரசியல் தீர்வுகள் யாழ்ப்பாணத்தில் எடுக்கப்படும் போது விடுதலைப்புலிகளின் யாழ். அரசியற்பிரிவினரையும் கலந்தாலோசித்துச் செய்தல் நன்று என்று குறிப்பிட்டுள்ளார். விநாயகமூர்த்திக்குப் பதிலளிக்கும் வகையில் முதல்வரினதும் அவர் சார்ந்த உறுப்பினர்களினதும் பதவி விலகல் அறிக்கை அமைந்துள்ளது.

விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர், பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினர் கேட்டுக் கொண்ட தற்கிணங்க நூலகத்திறப்பு விழாவைக் கைவிடுவ தாகக் குறிப்பிட்ட முதல்வர் செ.கந்தையன் மேலும் தனது அறிக்கையில், திறப்புவிழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இத்தருணத்தில் ஒன்றி யங்கள் மூலமும் பத்திரிகைகள் மூலமும் தவறான தகவல்கள் வெளியிடப்பட்டன. யாழ் நூல் நிலையத் தின் திறப்புகள் அபகரிக்கப்பட்டன. ஊழியர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். நகரபிதா உறுப்பினர்கள் கூடக் கடுமையான அச்சுறுத்தல்களுக்கு உட்படுத் தப்பட்டார்கள். மக்களுக்கு அவசியமான இந்த நூல்நிலையத்தை திறப்பதில் தமிழீழ அரசியல் பிரிவு இவ்வாறு தீவிரமாக செயல்படுவது துரதிர்ஷ்டவசமானது ஆகும் எனத் தெரிவித்தார்.

அறிவுக்கருவூலமான நூல்நிலையத்தை திறப்பதற்கு மக்கள் அமைப்புக்கள் என்று கூறிக் கொள்பவர்கள் நடந்துகொண்ட முறையையிட்டு நாங்கள் வேதனையடைகின்றோம். ஜனநாயக நிறுவனமான மாநகராட்சி தன்னுடைய பராமரிப்பில் உள்ள நூல்நிலையத்தை திறப்பதற்கு முடியாத சூழ்நிலையில் உறுப்பினர்களாகத் தொடர்ந்தும் இருப்பதற்கு எந்த உறுப்பினரும் விரும்பவில்லை. குடாநாட்டில் உள்ள ஜனநாயக சூழ்நிலை இப்படித்தான் இருக்கின்றது. இந்த நாடும், சர்வதேசமும் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும். இந்த ஜனநாயக மறுப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து உறுப்பினர்களாகிய நாங்கள் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்து கொள்கின்றோம். என்றும் தமது பதவி விலகல் அறிக்கையில் முதல்வர் கந்தையன் குறிப்பிட்டுள்ளார்.□□□□□□□□□□□□□□□□□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணி ரங்கனுடன் நேர்காணல்

# MARAN V TR-TEC

த ஜெயபாலன்

இலங்கை அரசின் ஒடுக்குமுறையினால் புலம்பெயர்ந்த தமிழர்கள் இம்மண்ணில் தம் வேர்களை பதிக்க மிகுந்த பிரயத்தனம் எடுக்கின்றனர். அதன் முதற்படியாக தஞ்ச விண்ணப்பமும் அடுத்ததாக வேலையும் அமைகிறது. இந்த வேலை வாய்ப்பில் இன்று இலண்டனில் வாழும் சில ஆயிரம் தமிழர்கள், தமிழர்களின் கீழ்யே தொழில் செய்கின்றனர். 100 முதல் 200 வரையானவர்கள் தமிழ் பொது அமைப்புகளில் வேலை செய்கின்றனர். இவ்வமைப்புகளில் உள்ள சீரற்ற, திறனற்ற, ஊழல் நிறைந்த, எதேச்சதிகாரப் போக்கான நிர்வாகங்கள் அல்லது முகாமைத்துவங்கள் அங்கு பணியாற்றும் ஊழியர்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதுடன் தம் அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்து துன்புறுத்தவும் செய்கின்றனர்.



சட்டத்தரணி ரங்கன் தனது கட்சிக்காரர் மாறனுடனும் சாட்சி ஜீவரட்ணத்துடனும் நீதி மன்றில் இருந்து வெளியேறுகிறார்.

முகாமைத்துவத்தின் இந்த எதேச்சதிகாரப் போக்கிற்கு எதிராக TCHA, TR-TEC ஆகிய இரு அமைப்புகளில் இருந்தும் கடந்த ஆறுமாத காலத்திற்குள் இருவர் தொழில் நீதி மன்றத்திற்குச் சென்று நியாயம் கேட்டனர். TCHAல் இருந்து ஓகஸ்ட் 2 2002ல் ரைகர் பால என்ற கெ பாலச்சந்திரன் என்பவரும் TR-TEC ல் இருந்து பெப்ரவரி 11 2003ல் மாறன் என்ற எ திருமாறனும் தமது முகாமையாளர்களாக இருந்த ஆர் ஜெயதேவனையும் (TCHA), எ சிறிதரனையும் ( TR-TEC ) நீதிமன்றத்துக்கு இழுத்து வந்து பாடம் புகட்டி உள்ளனர். இதன் மூலம் புலம்பெயர்ந்து வாழும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு அவர்களது உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை இவ்விருவரும் ஊட்டி உள்ளனர். மேலும் எஸ் சசிதரன் என்பவர் தான் வேலை செய்த SBE Ltd என்ற பிரன்ஞ்சு நிறுவனம், இனவாத அடிப்படையில் தன்னை வேலையால் நிறுத்தியதாகக் குற்றம்சாட்டி வழக்குப் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கு மார்ச் 27 2003ல் அஸ்போர்ட் தொழில் மன்றத்துக்கு வருகிறது.

இதே காலப்பகுதியில் வளர்மதி ( TR-TEC ), பத்மநாப ஐயர் (TWAN) என இருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதில் முன்னவர் ஒரு பெண் பின்னவர் தனது அறுபதுக்களில் உள்ளவர். இவர்கள் தம் வேலை நீக்கம் தொடர்பாக அதிருப்தி அடைந்தாலும் மேற்குறிப்பிட்ட இருவரைப்போல் போராடும் சக்தியைப் பெற்றிருக்கவில்லை. பலர் இப்படித் தமது வேலை இடங்களில் இழைக்கப்பட்டும் அநீதிகளுக்கு எதிராக வெவ்வேறு காரணங்களுக்காகப் போராட முடியாமல் தமக்குள்ளேயே மனம் வருந்திக் கொள்கின்றனர்.

இவ்வழக்கு தமிழ் பொது அமைப்புகள் பற்றி என்ன சொல்ல வருகிறது. இது தொடர்பாக திருமாறன் - TR-TEC வழக்கில் திருமாறனை பிரதிநிதித்துவப்படுத்தி அவருக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுத்த சட்டத்தரணி ரங்கனை அவரது அலுவலகத்தில் 19 பெப்ரவரி 2003ல் சந்தித்து எடுக்கப்பட்ட நேர்காணல் இது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசம் : ஏன் இந்த வழக்குத் தொடரப்பட்டது? இந்த விடயத்தை TR-TEC அமைப்பிற்குள்ளேயே வைத்துத் தீர்க்க முடியாமல் போனதற்கு என்ன காரணம்?

ரங்கன் :

திருமாறன் தானது அடிப்படை உரிமைகள் பற்றி TR-TEC இடம் தொடர்ந்து கேட்டு வந்தார். அதற்கு அந்நிறுவனத்தின் முகாமைத்துவம் பதிலளிக்காததால் திருமாறன் என்னை அணுகினார். அதற்கமைய தொழிலாளர் சட்டத்தின் கீழ் எத்தனை மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டும், என்ன வேலை செய்ய வேண்டும், சம்பளம் எவ்வளவு, விடுமுறை நாட்கள் எத்தனை என்ற அடிப்படைத் தகவல்களைக் கொடுக்கும் படி கூறி திருமாறன் அங்கு வேலையில் இருக்கும் போதே கடிதம் போட்டேன். அந்த விபரத்தை அவர்கள் இரண்டு வாரங்களுக்குள் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் கொடுக்கவில்லை. திருமாறன் வேலையில் இருக்கும் போதும் நானும் திருப்பித் திருப்பி அவர்களை ஒரு தொழிலாளிக்கு கொடுக்கும் உரிமைகளைக் கொடுக்கும் படி கேட்ட போதும் அவர்கள் பதிலளிக்கவில்லை. TR-TEC க்கு ஆரம்பத்தில் செல்லத்தம்பி அன் சன்ஸ், நாக் அன் கோ என்ற இரு சட்ட நிறுவனங்கள் வேலை செய்தன இரு நிறுவனங்களுக்கும் கடிதம் போட்டும் பதிலில்லை. அதனால் அந்த நட்டஈட்டை அவர்கள் இப்போது கட்டி உள்ளனர்.

நான் கடிதம் போட்டு ஒரு வாரத்தில் அவர்கள் திருமாறனை வேலையால் நிறுத்தி விட்டனர். பின்னர் ஒரு மாதத்திற்குப் பிறகு அவர்கள் தங்கள் சட்டத்தரணி ஊடாக எழுதிய கடிதத்தில் திருமாறன் எமது கடிதம் வருவதற்கு இரு நாட்களுக்கு முன்னரே வேலையால் நின்று விட்டார் என எழுதினார். அது பொய். திருமாறன் வேலை விட்டது முதலில் 10 மே 2002 என்று சொன்னார்கள். பிறகு 11 மே 2002 என்று சொன்னார்கள். இவை உண்மையான திகதிகள் என்று நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை.




TR-TECல் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட அருளானந்தம் திருமாறன் (வலது), திருமாறனை நியாயமற்ற முறையில் வேலையால் துக்கிய முகாமையாளர் அப்பையா சிறிதரன்.(இடது)

நாங்கள் போட்ட கடிதத்திற்கு அவர்கள் ஒரு மாதம் தாமதித்து திருமாறனே வேலையை விட்டுச் சென்று விட்டார் என்று எழுதிய போது அவர்கள் திரை மறைவில் அதற்கான வேலைகளைச் செய்துவிட்டனர்.

ஏன் இந்த வழக்குத் தொடரப்பட்டது என்றால் திருமாறனுக்கு வேறு வழி இருக்கவில்லை. வழக்குத் தொடரப்படாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வழிகள் இருந்தும் TR-TEC நிர்வாகமோ முகாமைத்துவமோ அதற்கு முன்வரவில்லை. திருமாறனுக்கு வழக்குத் தொடர வேண்டும் என்ற விருப்பம் இருக்கவில்லை. ஆனால் வழக்குத் தொடராமல் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்க முடியாது என்ற நிலைக்குத் திருமாறன் தள்ளப்பட்டார்.

தேசம் : தொழிலாளர் சட்டத்தின் எந்தெந்த உரிமைகளும் பாதுகாப்பும் திருமாறனுக்கு முகாமைத்துவத்தால் அல்லது நிர்வாகத்தால் மறுக்கப்பட்டது?

ரங்கன் :

திருமாறன் TR-TEC ல் இருந்து தானாக விலத்தியதாகவும் TR-TECன் கிளையான LCT ல் அவருடைய வேலை ஒப்பந்தம் முடிவுக்கு வந்ததாகவும் TR-TEC முகாமைத்துவம் தெரிவித்து அவரது உரிமைகளை மறுத்து அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டார். மேலும் அவருக்கு விடுமுறைகள் வழங்கப்படவில்லை. இரண்டு ஆண்டுகள் விடுமுறை இன்றி தொடர்ந்து வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளார். மேலும் என்ன வேலைகள் என்பது உறுதிப்படுத்தப்படாமல் வேலைப்பழு சுமத்தப்பட்டது. அவர் மீது துன்புறுத்தல்களும் (harassments) மேற்கொள்ளப்பட்டது. திருமாறனுக்கு எதிராக வேலை ஒப்பந்தம் போன்ற பொய்யான ஆவணங்களும் தயாரிக்கப்பட்டது.

தேசம் : இவ்வழக்கில் பொது மக்களுக்குச் சேர வேண்டிய £35,000 வரை வீணடிக்கப்பட்டு இருக்கிறது. இப்பிரச்சினையை சுமுகமாக அல்லது நீதிமன்றத்திற்கு வெளியே (Out of Court Settlement) தீர்க்க நீங்கள் உங்கள் கட்சிக்காரர் திருமாறனுக்கு ஆலோசனை வழங்கவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்கன் :

உண்மையில் வரி செலுத்தும் மக்கள் எவ்வளவு இழந்து இருக்கிறார்கள் என்று பார்த்தால் அது நீங்கள் குறிப்பிட்ட £35,000க்கும் மேல். திருமாறனுக்கு Out of Court Settlement க்கு ஆலோசனை வழங்க வேண்டிய தேவை வரவில்லை. ஏனென்றால் ஆரம்பத்தில் இருந்தே TR-TEC முகாமைத்துவம் ஒரு confrontational attitudeஐத் தான் கொண்டிருந்தது. வழக்கு மன்றத்தில் முதல் நாள் நாங்கள் நட்ஈடாக £13,000 கேட்ட போது அதற்கு அவர்கள் மறுத்து விட்டனர்.

தேசம் : நீதி மன்றில் இவ்வழக்கு ஆரம்பிக்கப்பட்டு சில நிமிடங்களிலேயே வழக்கின் முக்கிய அம்சம் உங்களால் தோற்கடிக்கப்பட்டது. அங்கு உங்களால் தகர்க்கப்பட்ட சட்ட விடயம் என்ன?

ரங்கன் :

இது உண்மையில் ஒரு பகிடிக்குரிய விடயம். திருமாறனை குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வேலைக்கு எடுத்ததாக (fixed term contract) TR-TEC முகாமைத்துவம் தெரிவித்தது. திருமாறனுடைய வேலை ஒப்பந்தக் காலம் 31 யூன் 2002ல் முடிவடைந்தது. அதனால் திருமாறன் வேலை நீக்கப்படவில்லை ஒப்பந்தக் காலம் முடிந்துவிட்டது என்பது TR-TEC முகாமைத்துவத்தின் வாதம். வேலைக்கு எடுக்கப்பட்டவர் ஏதாவது காரணத்திற்காக அவ்வேலையால் நிறுத்தப்பட்டால் அவர் வேலை நீக்கம் (dismissed) செய்யப்பட்டார் என்பதே அர்த்தம் எனத் தொழிலாளர் சட்டம் சொல்கிறது. இந்த முகாமைத்துவங்கள் எல்லாம் இந்தச் சட்டச் சிக்கலில் இருந்து தப்புவதற்காக குறிப்பிட்ட காலத்திற்கு என்று ஊழியர்களை எடுத்துவிட்டு, அந்த ஒப்பந்தங்களைக் காலத்திற்குக் காலம் புதுப்பிப்பித்து வந்தன. அவசியம் இல்லாவிடின் அல்லது வேறு காரணங்களுக்காக ஒப்பந்தம் முடிந்து விட்டது என்று கூறி தொழிலாளரை வீட்டுக்கும் அனுப்பின. ஒப்பந்தத்தை புதுப்பித்துப் புதுப்பித்து 10 ஆண்டுகள் வைத்திருந்து விட்டு ஒப்பந்தத்தைப் புதுப்பிக்காமல் தொழிலாளர்கள் வீட்டுக்கு அனுப்பவும் இந்தச் சட்டம் இடமளித்தது.

TR-TEC போன்ற முகாமைத்துவத்தின் எதேச்சதிகாரத்திற்கு துணையாகவும் தொழிலாளருக்குப் பாதகமாகவும் அமைந்த இந்த சட்டத்தில் பின்நாளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அதன் படி Fixed term contract க்கில் உள்ளவர்களையும் வேலையால் நிறுத்தினால் அது வேலை நீக்கம் என்று 1976ம் ஆண்டு தொழில் உரிமைச் சட்டத்தின் (Employment Rights Act) 95வது பிரிவில் பிந்நாளில் கொண்டு வரப்பட்ட சட்டத்திருத்தம் சொல்லியது.

இந்த Fixed term contractல் உள்ளவரை வேலையால் நிறுத்துவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் அது நியாயமான வேலை நீக்கம் (Fare dismissal). அநியாயமான முறையில் நிறுத்தப்பட்டால் அது நியாயமற்ற வேலை நீக்கம் (Un Fare dismissal). நியாயமற்ற முறையில் Fixed term contractல் உள்ளவர்களை உங்கள் வேலை ஒப்பந்தம் முடிந்து விட்டது (உண்மையில் வேலை நீக்கம்) என்று சொல்லி வீட்டுக்கு அனுப்புவதை இந்தச் சட்டத்திருத்தம் தடுக்கிறது.

அது TR-TEC முகாமைத்துவம் திருமாறனுக்கு இழைத்த அநியாயத்திற்கு நியாயம் கிடைக்க வழிசெய்தது. இந்த சட்டத் திருத்தத்தால் வழக்கு ஆரம்பிக்கப்பட்ட சில நிமிடங்களிலேயே அவ்வழக்கு திருமாறனுக்கு நியாயத்தை வழங்கும் திசையில் சென்றது. திருமாறனைப் போன்ற பல்லாயிரம் தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டம் ஒரு பாதுகாப்பைக் கொடுத்துள்ளது.

தேசம் : மேற்குறிப்பிட்ட சட்டத் திருத்தம் மிகவும் தெளிவாக சட்ட நூலில் சொல்லப்பட்டு உள்ளது. அப்படி இருந்தும் அமிர்தன் இராஜகாரியர் என்ற சட்டத்தரணி ஒருவரின் நிர்வாகத்தில் இருந்த TR-TEC அறக்கட்டளை நிர்வாகம், இரு சட்டநிறுவனங்களை தங்களுக்கு அமர்த்தி இருந்த போதும் எப்படி இந்த சட்டத்தை தெரியாமல் நீதி மன்றம் வந்தனர்? அதற்கு வேறு ஏதாவது காரணங்கள் உண்டா?

ரங்கன் :

அது ஏன் தெரியாமல் போனது என்பதை அவர்களைத் தான் கேட்க வேண்டும். நீதிமன்றத்துக்கு வந்து தங்கள் வாதத்தை மாற்ற முற்பட்டனர். ஆனால் அதற்கு அங்கு அனுமதி கிட்டவில்லை.

தேசம் : பொறுப்புள்ள அலுவலராகக் கடமையாற்றிய திருமாறன் பிற் திகதியிடப்பட்ட வேலை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதை எப்படி நீதிமன்றம் ஏற்க் கொள்ளும்படி செய்தீர்கள்?

ரங்கன் :

Employment Tribunalஇல் பொதுவாக வழக்குகள் ஆவணங்களின் அடிப்படையில் தான் நடத்தப்படும். எங்களது பலவீனம் என்னவென்றால் எங்களிடம் ஒரு ஆவணமும் இருக்கவில்லை. ஆனால் அவர்களிடம் தாராளமாக ஆவணங்கள் இருந்தது. பிற் திகதியிடப்பட்ட வேலை ஒப்பந்தம் பற்றிய திருமாறனின் வாதம் வழங்கப்பட்ட சாட்சியங்களை அடிப்படையாக வைத்தே வென்றெடுக்கப்பட்டது. நீதிமன்றம் சொன்னது "நாங்கள் திருமாறன் சொன்னதை முற்று முழுதாக ஏற்றுக் கொள்கிறோம். திருமாறனுக்காக வந்த சாட்சியங்களை ஏற்றுக் கொள்கிறோம். TR-TEC முகாமைத்துவம் சொன்னது போல் ஒப்பந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரியில் வழங்கப்பட்டு கையெழுத்துப் பெறவில்லை. அது மேயில் பிற்திகதியிடப்பட்டுத் தான் கையெழுத்துப் பெறப்பட்டது." இது ஒரு Fact of Finding.

தேசம் : TR-TEC அறக்கட்டளை சார்பில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய சாட்சியான அப்போதைய தலைவர் ரகுராஜா தவராஜா சாட்சியமளிக்க வராதது உங்கள் வெற்றிக்கு உதவியதா?

ரங்கன் :

அவர் ஏன் வரவில்லை என்று நீதிமன்றம் யோசித்து இருக்கலாம். ஆனால் அவர் வந்திருந்தால் வழக்கு தோற்றுப்போகும் என்றோ வராவிட்டால் வென்றுவிடும் என்றோ சொல்ல முடியாது. ஆனால் அவர் சம்பந்தப்பட்டவர் வந்திருக்க வேண்டும்.

தேசம் : TR-TEC சார்பில் சாட்சியமளித்த சிறிதரன், ரகுநாதன் ஆகியோர் சத்தியப்பிரமாணம் எடுத்து விட்டு பொய்ச் சாட்சியம் அளித்ததாக நீதி மன்றம் கண்டுள்ளதா?


ரங்கன் :

நான் சொல்வதானால் அவர்கள் சொன்னதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. Finding of Fact வந்து ஒப்பந்தம் மேயில் தான் கையெழுத்திடப்பட்டது. பொய்ச்சாட்சியம் என்பது உய்துணரப்படுகிறது.

தேசம் : TR-TEC, TCHA போன்ற தமிழ் அமைப்புகளில் தொழிலாளர் பாதுகாப்பு உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கலாம்?

ரங்கன் :

தமிழ் பொது அமைப்புகளில் வேலை செய்யும் ஊழியர்கள் தங்கள் உரிமைகளைப் பற்றிக் கேட்கத் தொடங்கினால் இந்த அமைப்புகளின் முகாமைத்துவம் ஒழுங்காகும் என நினைக்கிறேன். இரண்டொருதர் கேட்கத் தொடங்கினால் இது ஒரு serious ஆன விசயம் என்று முகாமைத்துவத்திற்குத் தெரியவரும். இவர்கள் அகதிகள் இல்லை இவர்களுக்கும் விசயம் தெரிகிறது. நாங்கள் இனி ஒழுங்காக இருக்க வேண்டும் என்று முகாமையாளர்கள் நினைப்பார்கள். இப்போது தானே இது தொடங்குகிறது. இனி ஒழுங்காக வரும்.





TCHAல் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ரைகர் பாலா (வலது), ரைகர் பாலா பாடம் புகட்டிய, மேலும் நீதிமன்றத்தால் சீர்கெட்ட நிர்வாகியாகக் காணப்பட்ட TCHA இயக்குநர் ஆர் ஜெயதேவன்.(இடது)

தேசம் : இவ்வாறு பாதிக்கப்படுபவர்களுக்கு உங்கள் ஆலோசனை என்ன?

ரங்கன் :

சட்டப்படி தொழிலாளருக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் Employment Lawல் சட்டங்கள் வந்து கொண்டிருக்கிறது. நிறையப் பாதுகாப்பு இருக்கிறது. முதலாளிகளுக்கு நன்மையாக தொழிலாளர்களுக் கொடுத்த பாதுகாப்பு. (உமக்கு பாதுகாப்பு இருந்தால் தான் நீர் வேலைக்குச் சேருவீர். அந்த அடிப்படையில் வழங்கப்பட்ட பாதுகாப்பு.) அது ஒருவருக்கும் தெரிவதில்லை. பலர் நம்பர் இல்லாமல் வேலை செய்கிறார்கள். தெரிந்தவர்களிடம் வேலை செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எதிராகப் போக முடியாது. holiday இல்லாமல் வேலை செய்கிறார்கள். இவர்கள் court க்குப் போவது தான் வழி.

தேசம் : தமிழ் பொது அமைப்புகளை நிர்வகிக்கும் அறக்கட்டளை பற்றி உங்களின் அனுபவம் என்ன?

ரங்கன் :

நான் பார்த்த வகையில் அறக்கட்டளை உறுப்பினர்களுக்கு அவர்களுடைய கடமையைப் பற்றி ஒன்றும் ஒழுங்காக வரையறுத்துச் சொல்லப்படவில்லை. எந்த ஒரு ஆவணமும் இருப்பதில்லை. Management Commette என்றால் என்ன நீங்கள் செய்ய வேண்டும். நீங்கள் meetingஐ எப்படி organise பண்ணவேணும் எத்தனை பேர் போறம் இவை தான் கதை. இவ்வளவு தான் இவைக்குச் சொல்லப்பட்டு இருக்கு. ஒருவர் சொன்னார் "சொன்னதைச் செய்ய வேண்டியது தானே. சப்பாத்துத் துரை என்றால் துரைக்க வேண்டியது தானே." இது தான் Mentality.

தேசம் : இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு சட்ட நிறுவனங்களுமே தமிழ் அமைப்புகள். இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அனுபவம் எப்படி அமைந்தது?

ரங்கன் :

தமிழ் என்று நான் அதைப் பார்க்கவில்லை. இரண்டு சட்ட நிறுவனங்கள் என்று தான் நான் பார்க்கிறேன்.

தேசம் : தமிழ் சமூக அமைப்பு ஒன்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது என்று நீங்கள் மனவருத்தப்படவில்லையா?

ரங்கன் :

நான் அந்தக் conseptல் வேலை செய்வதில்லை. நான் ஒரு தமிழ் சட்டத்தரணி என்று பார்ப்பதில்லை. நான் ஒரு சட்டத்தரணி. நான் என்னிடம் வரும் ஆங்கிலேயக் கட்சிக்காரருக்கு கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை தமிழ் கட்சிக் காரருக்கும் கொடுப்பேன். தமழர் என்றாலும் ஆங்கிலேயர் என்றாலும் இருவரையும் ஒரே விதமாகத் தான் பார்ப்பேன். அப்படிச் செய்யாவிட்டால் அது மோசடி.

TR-TEC அமைப்போ அல்லது மற்றைய அமைப்புகளோ இந்த தமிழ் என்ற ஆயுதத்தை பயன்படுத்துவது மோசடியானது. உதாரணமாகத் தமிழ் தானே தமிழ் தமிழுக்கு எதிராகப் போகக் கூடாது. இந்த அமைப்புகள் எல்லாம் அப்படிப் பார்கிறதா. TR-TECல் வேலை செய்த திருமாறனும் ஒரு தமிழ் ஆள் தானே. ஒரு வகையில் பார்த்தால் திருமாறனுக்கு அந்த அநியாயம் இழைக்கப்பட்டதே அவர் தமிழ் ஆள் என்றதால் தான். திருமாறனுக்காக வந்த சாட்சியங்களின் அடிப்படையில் பார்த்தால் அவருக்கு நடந்த அநியாயங்களுக்கு காரணம் அவர் தமிழராக இருந்ததும் தான். அங்கு ஆசிரியர்களாக வேலை செய்த தமிழரல்லாதவர்களுக்கு வேலை ஒப்பந்தம், விடுமுறை எல்லாம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

(ஹக்னியில் வாழ்ந்த கறுப்பினச் சிறுமி விக்ரோறியா கொலம்பியே, நூற்றுக்கு மேற்பட்ட காயங்களுக்கு உட்பட்டு சித்திரவதை செய்து கொல்லப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது. அங்கு சித்திரவதையைச் செய்தது கறுப்பினத்தவர்கள். அந்தச் சிறுமியின் சமூகப் பணியாளராக இருந்தது கறுப்பினத்தவர். அச்சிறுமி ஒரு கறுப்பினத்தைச் சேர்ந்தவள் என்பதால் அக்கறை காட்டாததும் அந்த பரிதாப முடிவுக்கு முக்கிய காரணமாக இருந்தது.)

தமிழ் மக்கள் எப்பவுமே இனரீதியாக ஒன்று சேர்ந்திருந்ததில்லை. சாதிரீதியாக ஊர்ரீதியாகத் தான் ஒரணியில் திரண்டு இருந்தார்கள். இங்கு வந்து வசதி வரும்போது தேவைக்கு ஏற்ப இந்த இனத்தை நாங்கள் பாவித்துக் கொள்கிறோம். உண்மையில இது ஒரு பிழையான conseptல் நடக்கிற படியால்; தமிழ், தமிழ் ஆக்கள், தமிழ் employers, தமிழ் employees, தமிழ் students அதுதான் இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணம். இவை ஒன்றுமே ஒழுங்காக இருந்ததில்லை. அப்போது அதுக்கான தேவை வரவில்லை. இப்ப ஒரு தேவை வந்து உள்ளது. தொடர்ந்து இப்படியான வழக்குகள் வருவது எல்லாருக்கும் ஒரு விழிப்புணர்வைக் கொடுக்கும். இது தொழிலாளருக்கும் நல்லது, தொழில் கொடுக்கிறாக்களுக்கம் நல்லது.

தேசம் : நீதி மன்றத்தின் இத்தீர்ப்பிற்கு எதிராக TR-TEC முகாமைத்துவம் மேன்முறையீடு செய்யும் சாத்தியம் உண்டா?

ரங்கன் :

முதலாவது வழக்கில் அவர்கள் மேன்முறையீடு செய்ய சாத்தியம் இருந்தாலும் கூட இரண்டாவது வழக்கு அதற்கு ஒரு ஆணி அடித்து உள்ளது. Fact of Finding அதாவது TR-TEC முகாமைத்துவம் பொய்யான தகவலை வழங்கியதை நீதிமன்றம் கண்டுகொண்டது வந்து மாறாது. அதனால் அவர்களுக்கு மேன்முறையீடு செய்வது கடினமாகவே இருக்கும். Point of Law வை வைத்துத்தான் மேன்முறையீடு செய்ய முடியும்.□□□□□

## நிர்வாகத்தை மாற்றுங்கள் – ரி ஜீவரட்ணம்



வழக்கில் திருமாறனின் வெற்றி TR-TEC அறக்கட்டளை மற்றும் முகாமைத் துவத்திற்கு எதிராக அவ்வமைப்பின் முன்னாள் செயலாளர் ரி ஜீவரட்ணமும் (படத்தில்) முன்னாள் தனாதிகாரி மு கனகராஜாவும் வைத்த குற்றச் சாட்டுகளை மேலும் உறுதிப் படுத்தியுள்ளது. வழக்கின் தீர்ப்பில் மிகவும் திருப்தி அடைந்ததாகக் குறிப்பிட்ட ஜீவரட்ணம் சம்பந்தப்பட்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் மீது அறக்கட்டளை ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தற்போதுள்ள அறக்கட்டளை நிர்வாகம் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

TR-TEC : தலைவர் அமிர்தன் இராஜகாரியர், உப தலைவர் எஸ் வி மூர்த்தி, செயலாளர் கெ மகேஸ்வரன், தனாதிகாரி ரகுராஜா தவராஜா, மாசிலாமணி, ஞானமித்திரன், ஆர் விஜயகுமார், ஜி குகநேசன், இ செல்வதுரை, கதிர்காமநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய குறும்பட விழா

தொகுப்பு : அஜீவன் (குறும்பட இயக்குநர்)



ஐரோப்பியத் திரைப்படக் கழக இணைப்பாளர் அஜீவன் பேசுகிறார். அருகில் ஐ தி க செயலாளர்.

சுவிற்சர்லாந்தின் ஓல்டன் - தூலிக்கன் பகுதியில் நடைபெற்ற முதல் திரைப் பட விழாவாக ஐரோப்பிய குறும்பட விழா கடந்த 2003 பெப்ரவரி 15ம் திகதி காலை 10.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை நடைபெற்றது.

இவ்விழாவுக்கு பல நாடுகளிலிருந்தும் வந்திருந்த 60க்கும் மேற்பட்ட குறும் படங்கள் கலந்து கொண்டன. அவற்றில் இறுதித் தேர்வாக 19 குறும் படங்கள் தேர்வு செய்யப்பட்டு திரையிடப் பட்டதுடன் நிகழ்சியின் இறுதியில் சுவிஸ் திரைப்பட சம்மேளனத்தின் 8 நடுவர்களால் தீர்மானிக்கப்பட்ட முடிவுகளும் மக்களது அன்றைய ரசனையாக தேர்வான ஒரு படத்தின் முடிவும் அறிவிக்கப் பட்டது. இது தவிர 2002 ம் ஆண்டின் சிறந்த யதார்த்த முழு நீள சினிமாவுக்கான விருது தங்கர்பச்சான் இயக்கிய அழகி திரைப் படத்துக்கு வழங்கப்பட்டது.

ஐரோப்பிய குறும்பட விழாவின் அன்றைய நிகழ்ச்சி முன்னோட்டமாக சுவிசின் அழகிய காட்சிகளின் பின்னணியில் சுவிற்சர்லாந்தின் கொடி நளினமிட நாதமும் நடனமும் கொண்ட ஒளித்தொகுப்பு அனைத்து பார்வையாளரின் கவனத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டது.

நிகழ்வின் முக்கிய பிரமுகரான தூலிக்கன் பகுதி தலைவர் டொக்டர். தியொபில் பிறய் பேசும் போது "இப்பகுதியில் நடைபெறும் முதலாவது திரைப்பட விழாவாகக் நடாத்தப்படும் இவ்விழா மிக சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது கண்டு மகிழ்வதாகவும் சுவிஸ் மக்களுக்கு தமது நாட்டில் வாழும் தமிழ் சமூகத்தின் கலை கலாச்சார மற்றும் பிரச்சனைகளை புரிந்து கொள்ளக் கிடைத்த 'அரியதொரு வாய்ப்பு இது" என்றும் கூறினார். மேலும் அவர் இக்

ஐரோப்பிய குறும்பட விழாவின் இறுதித் தேர்வுக்கு தெரிவுசெய்யப்பட்ட படங்கள் :-

- அடையாளம் - South India
- அப்பா - South India
- சென்னைப் பட்டணம் - South India
- Einen Augenblick Lang Liebe - Germany
- என்ன சொல்ல - Germany
- The Indian National Army - South India
- இனி - South India
- கனவுகள் - South India
- மல்லி - South India
- மனிதநேயம் - South India
- மாத்தம்மா - South India
- நிறப்பிரிகை - UK
- ஒரு நாள் (One Day) Germany
- பதிவுகள் - Switzerland
- பொன் வண்ணம் - South India
- சுப்ரமணிய பாரதி - South India
- The Box of Joy - South India
- தேடல் - South India
- ஊருகும் பனிப்பூக்கள் - Switzerland

திரையிடத் தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் படங்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.



கலைச்செல்வன் விருதைப் பெற்றுக் கொள்கிறார்.

குறும்பட விழாவில் தமிழர்களுடன் சுவிஸ் மக்களும் இணைந்து பணியாற்றுவது கண்டு மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்.

ஐரோப்பிய குறும்பட விழாவின் ஒழுங்கமைப்பாளர் அஜீவன் பேசும் போது "இலங்கையில் நாம் ஒரு தமிழ்ச் சினிமாவை உருவாக்கத் தவறிவிட்டாலும் புலம் பெயர்ந்து வாழும் இந் நாடுகளிலாவது எமது எதிர்கால சந்ததியினருக்காக யதார்த்த தமிழ் சினிமா ஒன்றை உருவாக்க எதையாவது செய்து விட்டுப் போக வேண்டும். இவ் விழா மூலம் நல்ல பல சினிமாக்களை பார்க்கவும் புலம் பெயர் சினிமா ஒன்றை உருவாக்கவும் கூடியதாக இருக்கும்" என்றார்.

இக்குறும்பட விழா பற்றிய செய்திகளையும் அஜீவனது பேட்டியையும் சுவிஸ் பத்திரிகைகள் முக்கியத்துவமளித்து பிரசுரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சுவிசின் திரைப்பட சம்மேளனத்தின் தலைவர் மார்கஸ் பாஸ்லர் பார்வையாளர் தேர்வை நடாத்தினார். ஐரோப்பிய குறும்பட விழாவின் நடுவர் குழுவுக்குத் தலைமை தாங்கிய சர்வதேச புகழ் பெற்ற பின்கு பட இயக்குனரும் Stop Motion Film அதிபருமான கவியே காசியா விருதுகளுக்கான பட்டியலை வாசித்தார்.

150 முதல் 200 பேர் வரை அரங்கு நிறைந்திருந்த பார்வையாளர்களில் பெரும்பாலானவரகள் சுவிசின் திரைப்படத்துறை சார்ந்த சுவிஸ் கலைஞர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.



விழா ஏற்பாட்டாளர்களும் தேர்வுக்குழுவினரும் விருது பெற்றவர்களும்.

ஐரோப்பிய குறும்பட விழா 2003 விருதுகள் கீழ் வருமாறு :-

### சிறந்த குறும்பட விருது

1. முதலாவது இடம் - தங்க விருது
அப்பா (இயக்கம் : காவியா புகழேந்தி)

2. இரண்டாவது இடம் - வெள்ளி விருது
தேடல் (இயக்கம் : ஆர்.புவனா)

3. மூன்றாவது இடம் - வெண்கல விருது
சென்னைப் பட்டணம்
(இயக்கம் : ஜெயபாஸ்கர்)

### சிறந்த ஆவணப்பட விருதுகள்

1. முதலாவது இடம் - தங்க விருது
சுப்ரமணிய பாரதி
( இயக்கம் : அம்ஷன் குமார்)

2. இரண்டாவது இடம் - வெள்ளி விருது
மாகாத்தம்மா
( இயக்கம் : லீனா மணிமேகலை)

3. மூன்றாவது இடம் - வெண்கல விருது
ஒரு நாள் ( இயக்கம் : பாரதி வாசன்)

4. வளரும் படைப்பாளிகளுக்கான விருது
உருகும் பனிப்பூக்கள் - சுவிற்சர்லாந்து
(இயக்கம் : கலைச்செல்வன்)

### ஏனைய விருதுகள்

01. சிறந்த கதைக்கரு : The box of Joy
இ எம் ஆதித்யன்

02. சிறந்த ஒளிப்பதிவு : அடையாளம்
சண்டோனியோ டெர்சியோ

03. சிறந்த இயக்குனர் : அப்பா
காவியா புகழேந்தி

04. சிறந்த இசையமைப்பு : அப்பா
அரவிந் சித்தார்த்த

05. சிறந்த தொகுப்பாளர் : மனிதநேயம்
எம் மணிமாறன்

06. சிறந்த நடிகர் : அடையாளம் - ராம்

07. சிறந்த நடிகை : அப்பா - சுமங்கலி

08. சிறந்த குழந்தை நட்சத்திரம்: கனவு

09. Viewers Choice Award பார்வையாளர் தேர்வு : மனிதநேயம்

10. 2002ம் வருடத்தின் சிறந்த யதார்த்த தமிழ் சினிமா : அழகி
இயக்கம்: தங்கர் பச்சான்

இலண்டனில் சினிமாப் பட்டறை
விபரம் – தேசம் 020 8979 0354



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து அரசியற்கொலைகள் அடுத்த அடி என்ன?



கோபன் மகாதேவா
பேராசிரியர்
MSc, PhD, FIMfgE, FIEE, FCIM, Hon. DLitt

ஈழம் என்னும் இலங்கைத் தீவில் சென்ற 55 ஆண்டுகளாக நடந்துவருவது அரசியற் கொலையே. அரசியல் என்பது பொது மக்களின் சேவை எனும் தத்துவமும் கோட்பாடும், சில மக்களின் சேவை என்னும் குறுகிய நோக்குடன் ஓர் நாடகமாகவே நடாத்தப்பட்டு வந்திருக்கிறது. தீவின் அரசியலால் இன்றளவில் அதிக நன்மை அடைந்துள்ளோர் சிங்கள மக்களின் சில குடும்பத்தினரே. சிறிய அளவில், இவ்வழியில் சில தமிழ்க் குடும்பங்களும் பலன் பெற்றதுண்டு.

இந்நிலையை மாற்ற 1970 களில் தென் இலங்கையில் ரோகன விஜயவீரவின் தலைமையில் ஜேவிபி என்னும் ஆயுதக்குழுவினர், இறக்குமதி செய்த மேடைத் தத்துவங்களுடன், ஓர் புரட்சியினைத் தொடங்கிப் பல காரணங்களினால் தோல்வி அடைந்தனர். உயிர் தப்பிய அவரின் வாரிசுகள் சிலர் இன்று பரந்த நோக்கும் கொள்கைப் பலமும் குன்றிய சுருக்குவழி அரசியலின் முலம் ஈழத்து அரசியற்கொலையை மேலும் ஊக்குவிக்கின்றனர்.

## அரசியற் கொலையும் மற்றைய கொலைகளும்

இலங்கையின் சுயநல அரசியலினால், மானிட அரசியற்தத்துவமும், அரசாங்கங்களிலும் அரசியலிலும் மக்கள் கொள்ள வேண்டிய நம்பிக்கையும் மட்டுமல்ல, சென்ற 55 வருடங்களில் பல்லாயிரம் பொது மக்களின், போராளரின், அரசியலாளரின், அரசாங்க, சமூக சேவையரின் உயிர்கள், உடமைகள், பொன் போன்ற ஆக்கபூர்வமான வாழ்நாட்களும், தனிநபர்கள், குடும்பங்கள், கிராமங்கள், இனங்கள், தேசம் முதலியவையின் முன்னேற்றம், பொருளாதாரம், முதலிய எல்லாமே கொல்லப்பட்டன.

2001ல் சுமார் 2000 உயிர் இழப்புக்களைக் கண்டது. ஆனால் 2002 பெப்பிரவரி 22ன் யுத்த நிறுத்த இணக்கத்தின் பின் நடந்த கொலைகள், தற்கொலைகளை விரல்களில் எண்ணலாம். இந்தப் புள்ளிவிவரம் ஒன்றே இன்று நடக்கும் பேச்சு வார்த்தைகளைப் பேதமின்றி உலகம் முழுவதும் ஊக்குவிக்கப் போதுமானது.

## சமாதானப் பேச்சுகள்

விடுதலைப் புலிகள் தமிழ்பேசும் மக்கள் சார்பிலும் மற்றைய எல்லோரினதும், முக்கியமாகச் சிங்கள பௌத்த மக்கள் சார்பில், இன்று பதவியிலுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும், போர் நிறுத்தம் மூலம் இணங்கி இன்றுவரை பேசி எடுத்துள்ள முடிவுகளை மேல்வாரியாகவாவது முதற்கண் ஆராய்வது என் எண்ணங்களை விளக்க உபயோகமாகவிருக்கும்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் இலங்கை அரசினாலும் விடுதலைப் புலிகளாலும் உதவிக்கு அழைக்கப்பட்ட நோர்வே அரசாங்கத்தின் சிரேஷ்ட அரசியலாளர், தூதுவர், இளைப்பாறிய படைத் தலைவர்கள் முதலியோரின் நேரடி ஒத்துழைப்பினுடனும் வழிநடத்தலுடனும் நடப்பது ஓர் ஆதாரம். நடந்து முடிந்த பேச்சுகளின் தலங்களும் திகதிகளும், முறையே:

(1) தாய்லந்து: 2002 செப்டம்பர் 16--18
(2) தாய்லந்து: 2002 ஒக்டோபர் 31 -- நவம்பர் 3
(3) நோர்வே: 2002 டிசம்பர் 2--5
(4) தாய்லந்து: 2003 ஜனவரி 6--9
(5) ஜேர்மனி: 2003 பெப்பிரவரி 7--10.

அடுத்து நடக்கவிருப்பது:
(6) ஜப்பான்: 2003 மார்ச் 18--21.

இவற்றை இனிமேல் 1ம் பேச்சு...2ம் பேச்சு...3ம் பேச்சு... ... என அழைப்போம்.

(1) முதற்பேச்சு: இதற்காக, 04-09-2002 அன்றே, சிறீலங்கா அரசு, 1998 தொடக்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதித்திருந்த தடையைச் சனாதிபதி சந்திரிகாவின் எதிர்ப்பையும் மீறிச் சட்டப்பூர்வமாக நீக்கியது. இப்பேச்சில், இரு பகுதியினரும், தாம் சமாதானப் பாதையையே விரும்புவதாயும், பேச்சுவார்த்தைகள் மூலம் இலங்கையின் எல்லா இனத்தினரும் அடிப்படை மனிதவுரிமை நீதியுடன் ஒற்றுமையாகச் சமாதானத்தில் வாழ்வதற்குப் போரை நிறுத்தி ஒரு நிரந்தரத் தீர்வினை அடையும் வழி முறைகளை ஆராய முடிவு செய்து உள்ளதாகவும் இணங்கினர்.

புலிகள், தமிழர் தம் பாரம்பரிய வதிவிடங்களான வட, கிழக்கு மாகாணங்களில் சுயநிர்ணய உரிமையுடனும் சமசுதந்திரத்தினுடனும் முஸ்லிம்களுடன் சேர்ந்து வாழவே விரும்புகின்றனர், இனிமேல் தனித் தமிழீழம் அமைப்பது எமக்கு அத்தியாவசியமல்ல, என அறிவித்தனர். அரசாங்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவின் தலைவர் பீரிஸ், தாம், நாட்டைப்பிரிக்காத, நாட்டின் நடு அரசாங்கத்தின் ஆட்சியுரிமை பாதிக்கப் படாத ஓர்அமைப்பின் கீழ் தமிழர் பிரதேசங்களுக்கு எவ்வளவு உரிமைகள் கைமாற்றிக் கொடுக்க முடியுமோ அவ்வளவையும் கொடுக்கத் தயார் எனவும் உறுதியளித்தார்.

போரினால் அளவில்லாச் சேதமடைந்துள்ள வடகிழக்குப் பிரதேசங்களின் புனருத்தாரண வேலை களை வெளிநாட்டு அரசுகளின் உதவியுடன் தொடங்குவதற்கு, இலங்கை அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளினதும் சமபங்கு அங்கத்தினர் கொண்ட நிர்வாகக்குழுவொன்றை அமைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

(2) இரண்டாவது பேச்சு: இதில், மூன்று முக்கிய உபகுழுக்கள், முஸ்லீம்கள் உட்பட அரசாங்கத்தினதும், விடுதலைப் புலிகளினதும், சமமான அங்கத்துவத்துடன் நியமிக்கப்பட வேண்டும் என முடிவாகியது. இவற்றில் ஒன்று, வட கிழக்கில் உள்ள மனிதநேச, மீளக்குடியேற்றலின் உடன் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு; மற்றது இரு பகுதியினரும் தலத்தில் கூடிக் கதைத்து, நாளாந்த எதிர்ப்பு நிலையைக் குறைத்து, மக்களின் இயல் நிலையைப் படிப்படியாக ஏற்படுத்துவதற்கு; மூன்றாவது, நாட்டின் அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்குகந்த ஒரு புது அரசியல் யாப்பையும், நீதி, நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயங்களையும் ஆராயும் உபகுழு.

அத்துடன், நோர்வேயில், முக்கிய உலக அரசாங்கங்களைக் கூட்டி இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் பரந்த ஆதரவு தேடி மீளக் குடியேற்ற வேலைகளுக்கு நிதி திரட்டுவது என்றும், கிழக்கு மாகாணத்தில் அன்றிருந்த பதட்டநிலை உடனே சீர்செய்யப்பட வேண்டும் எனவும் முடிவா கியது. மேலும், வட கிழக்கு மாகாணங்களில் அர சாங்கத்தினதும் பொது மக்களினதும் பிரதிநிதித் துவம் கொண்ட சமாதானக் குழுக்களை நியமிப்பது எனவும் முடிவாகியது. இரு பகுதியினரும் சமாதானப் பாதையிலும் பேச்சுவார்த்தைகளிலும் தம்தம் தொடரும் நம்பிக்கையை உறுதிப்படுத்தினர்.

விடுதலைப் புலிகள், தாம் கூடிய சீக்கிரம் ஒரு அரசியலமைப்பாக மாறி, மற்றைய தமிழ்க் குழுக்களையும் சேர்த்து ஜனநாயக முறையில் அரசியற் சேவை செய்ய விரும்புகின்றனர் எனவும், அதற்காகிய நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக் கின்றன என்றும் கலாநிதி அன்டன் பாலசிங்கம் பத்திரிகையாளருக்குத் தெரிவித்தார்.

(3) மூன்றாவது பேச்சு: இதில்,போர்நிறுத்தப் பலப்படுத்தலும், மானிடரீதி விடயங்கள், மீள்குடி யேற்றம், அரசியற் தீர்வு, முதலியன சம்பந்தமான விடயங்களும் பேசப்பட்டன. முடிவில், எல்லா இனத்தவர்களும் ஏற்கக்கூடிய ஒரு சமஷ்டிமுறை அரசாங்க அமைப்பை இலங்கையில் ஏற்படுத்தி, தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வதிவிடங்களா கிய வடகிழக்குப் பிரதேசங்களில், உட் சுயநிர்ணய உரிமையுடன் ஒரு தன்னாதிக்க அரசை நிறுவும் வழிமுறைகளை இரு பகுதியினரும் பரிசீலனை செய்வதென முடிவாகியது.

இப்படி ஒரு அமைப்பில், மத்திய அரசின் உள்ளேயும் மத்திய-மாகாண அரசுகளிடையேயும் எவ்வாறு ஆட்சியதிகாரம் பிரிக்கப்பட வேண்டும், மாகாணங்களின் நில எல்லைகள் எவ்வாறாக அமைய வேண்டும், எல்லோரினதும் அடிப்படை மனிதவுரிமைகளைப் பாதுகாக்கும் முறைகள், பொது நிதி, சட்ட நீதியும் கட்டுப்பாடும், முதலிய அம்சங்களை இரு பகுதியினரும் பரிசீலனை செய்து கருத்துப் பரிமாறுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஒஸ்லோவில் 2002 நவம்பர் 25 இல்நடந்த அனைத்துலக நாடுகளின் இலங்கைச் சமாதான ஆதரவு மகாநாட்டில் மீள்குடியேற்ற வேலைகளுக் குப் பண உதவி செய்ய முன்வந்த நாடுகளுக்கு இரு குழுவினரும் நன்றி தெரிவித்தனர். இரு பகுதியினரும் ஐந்தைந்து பெண்களுடன் ஒரு பெண்கள் விசேட நலக்குழு அமைப்பதெனவும், சிறாரின் உரிமைகளைப் பாதுகாக்க வட கிழக்கில் விடுதலைப் புலிகள், ஐ.நா. வின் விசேட சிறுவர் நலப் பிரிவாகிய யூனிசெவ் (UNICEF) நிறுவனத் துடன் பங்காளியாக உழைப்பதெனவும், அதற்குரிய பணச் செலவுகளை உலக அரசாங்களிடமிருந்து பெறுவதெனவும் மேலும் முடிவாகியது.

(4) நான்காவது பேச்சு: இதனில், வட மாகாண உயர்பாதுகாப்பு வலயம் சம்பந்தமான அபிப்பிராயபேதம் தலைதூக்கிய போதும், ஆக்க பூர்வமாக, இலட்சக்கணக்கான அகதிகளை யாழ் மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யும் உடன் நட வடிக்கைத் திட்டமொன்று உருவாக்கப்பட்டது. மேலும், மனிதநலத் திட்டங்களுக்கு முன்னிடம் அளிப்பதெனவும் முடிவாகியது. மூன்றாம் பேச்சில் இணங்கிய சமஷ்டி அரசியலமைப்பைப் பற்றித் தொடர்ந்து பேசுவதென்றும், மக்கள் வாழ்க்கையில் அதிசீக்கிரம் கணிசமான முன்னேற்றம் ஏற்படுத்த வேண்டும் என்றும், பண உதவி செய்ய முன்வந்த உலக அரசுகளுடன் தொடர்பு கொண்டு பணத்தைப் பெற்று, ஏற்கெனவே முடிவுசெய்த திட்டங்களைத் துரிதமாக முன்னேற்றிச் செல்வதெனவும் முடிவு எடுக்கப்பட்டது.

மேற்படி சேர்த்த வடகிழக்குப் புனருத்தா ரண நிதியின் காப்பாளராக உலக வங்கி தெரிந்து எடுக்கப்பட்டது. இறுதியில் இணங்கவிருக்கும் அர சியற் தீர்வில் அடிப்படை மனித உரிமைகளே மிக முக்கியமான மையமென இரு பகுதியினரும் கரு தியதால் இந்தத் துறையில் உலக நிபுணரான ஒருவரின் ஆலோசனையைப் பெறுவதென்றும், போரில் காணாமற்போனோர் எனக் கருதப்படும் சுமார் 20,000 பேரின் நிலமையைப் பற்றிய விசாரணையை நடத்தும் பொறுப்பைச் சர்வலோகச் செஞ்சிலுவைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தினரிடம் கையளிப்பதெனவும் தீர்மானம் செய்யப்பட்டது. முடிவில், இரு பகுதியினரும், எவ்வளவுதான் கடினமான பிரச்சினைகளைத் தாங்கள் எதிர்நோக்க வேண்டி நேரிடினும், தம் சமாதானப் பேச்சுக்கள் தொடருமென உறுதியளித்தனர்.

கடைசியாக ஜேர்மனியில் ஐந்தாங் கட்டப் பேச்சு வார்த்தைகள் நடந்தேறியுள்ளன. விடுதலைப் புலிகளின் தூதுக் கோஷ்டிக்குத் தலைமை தாங்கிய கலாநிதி அன்டன் பாலசிங்கத்தின் சுகாதார நிலையை மனதில் கொண்டு, முன்னர் மூன்று, நான்கு தினங்களுக்கு நடந்து வந்த பேச்சுவார்த்தைகள் இருநாட்களுள் முடிவடைந்தன. ஆறாங்கட்டப் பேச்சுகள், இலங்கைக்கு 270 மில்லியன் டொலர் அபிவிருத்திக் கடன் கொடுக்க முன்வந்துள்ள யப்பானிலேயே நடக்குமென எதிர் பார்ப்பு.

இடையில், புலிகள் யுத்தப் பாதையை விட்டுத் தாம் சமாதானப் பாதையையே பின் பற்றப்போவதென மேலும் உத்தரவாதமளித்து நிருபித்தால், USA அவர்களைப் பயங்கரவாதிகளின் பட்டியலிலிருந்து அகற்றித் தமிழரின் பாழடைந்த வடகிழக்குப் பகுதிகளின் புனருத்தாரண வேலைகளுக்கும் பண வுதவி செய்ய முடியும் என்னும் பாணியில் அமெரிக்க அரசாங்கப் பிரதிநிதிகள் பேசியிருக்கின்றனர். இதை, கணிசமான ஒரு முன்னேற்ற நிலையாயும், பொன் போன்ற சந்தர்ப்பமாயும் கணித்து, ஏழாங் கட்டப் பேச்சுவார்த்தைகளை ஏன் அமெரிக்காவிலேயே வைக்கக்கூடாது எனத் தோன்றுகிறது.

## அடுத்து எதைப் பற்றிப் பேசுவது?

தமிழீழப் பிரதேசங்கள் கூடிய சீக்கிரம் இயல் நிலைக்குத் திரும்ப வேண்டியது மிக மிக முக்கியமே. அதைத் தடைசெய்யும் பிரதான காரணி, வடகிழக்கில் இன்னும் நிலையாகி நிற்கும் அரச பட்டாளங்களே. இந்த விஷயத்தில், அண்மையில் நோர்விய சமாதானக் கண்காணிப்புக் குழுவின் தலைவர்கள் செய்துள்ள சிபார்சுகள் தெம்பு தரக் கூடியவை. அதாவது, இப்போது போர் நடக்கவில்லையே? ஆகவே வடகிழக்கில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலே சட்டத்தையும் ஒழுங்கு நிலையையும் அமுல் நடத்தும் பொறுப்பை, விசேட பயிற்சி பெறும் நவீனமுறை நகர்காவலர்களிடம் கையளித்து அரசபடையினர் பின்வாங்க வேண்டுமெனச் சொல்லியுள்ளனர். ஆகவே, அரசின் படைகள் வடகிழக்கில் இருந்து வெளியேறாவிடினும், தம் தம் அரண்களுக்குள் பின்வாங்கி இளைப்பாறும் நிலை கெதியிலே ஏற்படும் என எதிர்பார்க்கலாம்.

எனவே மேலே நான் சிபார்சு செய்யும் 7ம் USA பேச்சுகளில், கருமூல அம்சமாக, இரு பகுதியினராலும் கொள்கையில் ஏற்கெனவே ஏற்கப்பட்டுள்ள சமஷ்டி அரசாங்கத்தின் கீழ்மட்ட விவரங்களைப் பற்றிப் பேசத்தொடங்குவது உசிதம். ஏனெனில், சனாதிபதி சந்திரிகாவின் ஏறுமாறான நடத்தையால் பாராளுமன்றம் சடுதியாகக் கலைக்கப்பட்டுப் புதியதேர்தல் நடக்கவேண்டிய நிலை தற்செயலாக வந்தாலும் வரும். அதன்முன், சமஷ்டி அமைப்பில் ரணிலின் அரசாங்கத்தின் உண்மை விசுவாசத்தையும், அவர்களும், தமிழரின் சார்பில் புலிகள் எந்த அளவில் என்ன மாதிரியான சமஷ்டிய அரசாங்கத்தை எதிர்பார்க்கின்றனர் என்றும் மதிப்பிட இது ஓர் அரிய தருணமாகலாம். அத்துடன் சமாதானத்தை நம்பியிருக்கும் இன்றைய சிங்கள மக்களில் நூறில் எண்பதின்மரின் முன், பிரதமரின் ஐக்கிய தேசிய முன்னணியினர், தைரியமாக, அப்படிவரும் ஓர் சடுதித்தேர்தலில் வாக்குகள் கேட்டு, வெற்றியீட்டி, சமாதான அமுல் நடத்தலை, தமிழர் உரிமைகளுடன் நிறைவேற்றும் சாத்தியமும் கூடுமென நம்ப இடமுண்டு.

## கொலைகளை நிறுத்தும் ஐம்பெருந் தலைவர்கள்

இலங்கைத்தீவில் 55 ஆண்டுகளாக நடந்து வந்த அரசியற்கொலைகளை நிறுத்தும் கட்டம் உதயமாகியுள்ளது. இந்த விடிவின் காரணகர்த்தாக்கள்: ரணில் விக்கிரமசிங்க, வேலுப்பிள்ளை பிரபாகரன், லக்ஷ்மன் பீரிஸ், அன்டன் பாலசிங்கம், நோர்வேயின் அரசு. தீர்க்கதரிசனமும் தன்னலமற்ற தியாகமும் பிரயாசையும் கொண்ட இந்த ஐம்பெருந் தலைவர்களுக்கு 2005இல், சமாதான சேவைக்குரிய அகிலவுலக நோபல்பரிசு கட்டாயம் கிடைத்தே தீரும் என்பது என் கணிப்பு. இந்த நவீன பஞ்ச பாண்டவர் எடுத்துள்ள பாரிய பொறுப்புக் கெதியில் வெற்றிபெறப் பிரார்த்தித்து, நம்மாலான ஒத்துழைப்பைக் கொடுப்போமாக.

## உசிதமான அடுத்தடுத்த அடிகள்

அரசாங்கத்தினரும் விடுதலைப் புலிகளும் அடுத்து எவற்றைச் செய்தால் சமாதானப்பேச்சுகளும் இலங்கையின் இனப்பிரச்சினையின் தீர்வும் வேகமாகவும் பலன் தரக்கூடிய முறையிலும் செல்லும் என எனது மனதில் மேவிவந்த சில பழைய, புதிய எண்ணங்களைக் கீழே நிரல் செய்கிறேன்:

1) இலங்கை அரசை அனைத்துலகுக் கண்ணிவெடி எதிர்ப்புச் சாசனத்தில் ஒப்பமிடச் செய்தல்.

2) வடகிழக்கிலிருந்து இன்றுள்ள படையினரை வெளியேற்றி, புதிதாக அமைத்து விசேடபயிற்சி பெறும் நவீன, பல்லின இலங்கையர் நகரகாவலரை அமைதிகாக்கச் செய்தல். உதாரணமாக, இப்படையில் இலங்கைத் தமிழர் 50வீதமும் முஸ்லீம்கள் 25வீதமும் மலையகத் தமிழர் 15வீதமும் சிங்களவர் 10வீதமும் இருக்கலாம். ஆண்களும் பெண்களும் சரிசமமாகவும் இருக்கலாம்.

3) யப்பான் அனைத்துலக மகாநாட்டிலும் ஆறாவது சமாதானப் பேச்சிலும் மேலும் நிதி சேர்த்துப் புனருத்தாரண, கட்டிட, விவசாய, கைத்→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 27,000 தமிழர்களுக்கு தஞ்சம் மறுப்பு

# போராட்டத்துக்குத் தயார்

தொகுப்பு : பொ சிவக்குமார்

பெப்ரவரி 28ம் திகதி இலங்கைத் தமிழ் அகதிகளை பலவந்தமாகத் திருப்பி அனுப்புவதற்கு எதிரான பிரச்சாரக் கூட்டம் இல்போர்ட் நகர மண்டபத்தில் நடைபெற்றது. மண்டபம் நிறைந்து 600க்கும் மேற்பட்டவர்கள் இப்போராட்ட முன்னெடுப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தொழிற்கட்சி உறுப்பினர் தவத்துரை ஜெயரஞ்சன் தலைமையிலான, இலங்கைத் தமிழ் அகதிகளைப் பாதுகாப்பதற்கான குழு (Commette to Defend Sri Lankan Tamil Assylum Seekers - CDSTAS) இப்போராட்ட முன்னெடுப்புக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. இப்போராட்டக் குழுவின் செயலாளராக அகதிகள் அமைப்பில் நீண்டகாலமாக பணியாற்றும் கெ சிதம்பரநாதன் உள்ளார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முக்கிய உறுப்பினரான வி ஜெ போஸ் தனாதிகாரியாகவும் கவுன்சிலர் போல் சத்தியநேசனும் இவ்வமைப்பில் தங்களை ஈடுபடுத்தி உள்ளனர்.

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட ஒவ்வொருவரும் தமது தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் கவுன்சிலருடனும் தங்கள் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டது தொடர்பாக பேச வேண்டும் என்றும் இவ்வகை அரசியல் அழுத்தங்களே அரசின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த உதவும் என்றும் த ஜெயரஞ்சன் தெரிவித்தார்.

கெ சிதம்பரநாதன் பேசுகையில் பிரித்தானியாவில் மட்டும் 27,000 தமிழர்கள் தஞ்சம் மறுக்கப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார். தாங்களாகத் திரும்பிச் செல்பவர்களை மீளக் குடியமர்த்தும் திட்டத்திற்கு 133 மில்லியன் பவுணண ஐரோப்பிய ஒன்றியம்

---

→ தொழில், மீன்பிடித் திட்டங்களை ஆரம்பித்தல்.

4) ஏழாவது சமாதானப் பேச்சை அமெரிக்காவில் நடத்தி, அந்நாட்டின் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் நிதியுதவியையும் பெறல். இதனால் எத்தனையோ வழியில் நன்மை வரும்.

5) சனாதிபதி சந்திரிகாவின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு, முடியுமானவரை, அனைத்துலக மகாநாடுகளுக்கு அவரை அரசாங்க மந்திரிகளுடன் பெருந்தன்மையாய் அழைத்துச் செல்லல்.

6) இந்தியா, கனடா, சுவிட்சலந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா, ரஷ்யா உட்பட உலக வல்லுனர்களின் உதவியுடன் சமஷ்டி முறையில் இலங்கையின் வெவ்வேறு இனங்கள் திருப்திப்படும் வகையில் ஒரு புதிய அரசியல் யாப்பைக் கூடிய சீக்கிரம் தயாரித்தல்.

7) ஏற்கெனவே அமுலிலிருக்கும் அரசாங்க மொழிக் கொள்கையை உடனடியாக இலங்கை முழுவதும் பாரபட்சமின்றி முழுமூச்சுடன் நடைமுறையில் சாதனைப்படுத்தல்.

8) வடகிழக்கிலுள்ள பாடசாலைகளின் பழுதுபட்ட கட்டிடங்களைத் திருத்தியமைத்துத் தகுதியான, போதுமான ஆசிரிய நியமனங்களுடன் இயங்கச் செய்தல். மேலும், கூடிய சீக்கிரம் யாழ். நூல் நிலையத்தை, ஒற்றுமையாக, முடியுமானால் சனாதிபதியையே திறக்கவைத்து, இயக்குதல்.

9) அதேபோல், வடகிழக்கிலுள்ள சிகிச்சை மனைகளைத் திருத்தியமைத்து, வெளிநாட்டுப் பணவுதவி, வைத்தியத் தொண்டர் சேவை முதலிய வற்றினுடன் முழுவனே இயங்கச் செய்தல்.

10) வெளிநாட்டில் இருந்தும் தென்னிலங்கையில் ருந்தும் நாளாந்தம் கூடிய தொகைகளில் வடகிழக்குக்கு வருகை தரும் பிரயாணிகள் தங்கி, உண்டு, தமிழர் கலாச்சாரத்தையும் அண்மையில் நடந்துள்ள பாரிய மாற்றங்களையும் பார்க்க வசதிசெய்து உட்பொருளாதாரத்தையும் பேணல்.□□□□□□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்கி இருப்பதாகவும் அரசாங்கம் அதில் 70 மில்லியனை பலவந்தமாகத் திருப்பி அனுப்புவதற்கு வழங்கும்படி கேட்டு உள்ளதாகவும் கெ சிதம்பர நாதன் தன் பேச்சில் குறிப்பிட்டார். தஞ்சம் மறுக்கப் பட்ட ஒருவரைத் திருப்பி அனுப்ப 1,500 பவுண் செலவு ஏற்படுவதாகக் குறிப்பிட்ட அவர் இந்த 70 மில்லியன் பவுண் பிரித்தானிய அரசிற்கு கிடைத் தால் திருப்பி அனுப்புபவர்களின் எண்ணிக்கை அதி கரிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

சட்டத்தரணிகள் Legal Aidக்கு மேலாக 500 - 2000 பவுண் வரை வாங்குவதாகக் சிதம்பரநா தன் சாடினார். இதனை தன்னால் ஆதாரத்துடன் நிரு பிக்க முடியும் என்றும் அவர் உறுதியுடன் தெரிவி த்தார். இலங்கைத் தமிழர்களாக பாவனை செய்து தஞ்சம்கோரிய இந்தியத் தமிழர்களில் 85% தஞ்சம் இங்கு அங்கிகரிக்கப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்ட சிதம்பரநாதன் அந்தப் போலியான தஞ்ச விண்ணப்ப தாரி 2000 பவுணை செலுத்தும் போது அச்சட்டத்த ரணி ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் 800 பவுணுக்கு அதிகமாக இலாபம் அடைவதாகச் சுட்டிக்காட்டினார்.

அடுத்துப் பேசிய வி ஜெ போஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியை 100% ஊருக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ அனுப்ப எண்ணி னோம் ஆனால் அரசாங்கம் நாங்கள் இவ்வளவு பணத்தை அனுப்பினால் இங்கு நிர்வாகச் செலவு இவ்வளவு ஏற்படும் என்று கணக்குக் கேட்டனர். அதனால் சில சிக்கல்கள் ஏற்பட்டது எனக் குறிப் பிட்டார். அந்தத் தவறுகள் இனிமேல் விடக்கூடாது எனக் குறிப்பிட்ட போஸ் இந்த தமிழ் அகதிகள் பாதுகாப்பு அமைப்பை நிர்வகித்து சேவைகளை வழங்க ஏற்படும் செலவு பற்றியும் குறிப்பிட்டார். ஒரு அலுவலகத்தை திறந்து ஒருவரை அதற்கு நியமித்து சட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ள ஆண்டுக்கு 50,000 பவுண்கள் செலவு ஏற்படும் என்ற மதிப்பீட் டை போஸ் வெளியிட்டார். ஒரு மூன்று மணிநேர சினிமா பார்க்க 10பவுண் செலவேற்படும் போது 27,000 மக்களின் நியாயமான கோரிக்கைக்காகப் போராட ஆண்டுக்கு 10 பவுண் வழங்குவது அங்கி ருந்த சபையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பணம் வழங்குவோருக்கு பற்றுச் சீட்டும் கணக்கு விபரங்க ளும் வழங்கப்படும் என்று போஸ் உறுதி அளித்தார்.

இறுதியாக இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய ஆசிய நாட்டு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு நாடு திரும்பிய போல் சத்தியநேசன் சமாதானத்தை முழு மனதுடன் வரவேற்பதாகவும் ஆனால் நிலையான சமாதானம் ஏற்படும் வரை பலவந்தமாக யாரையும் அனுப்புவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார். இலங் கைக்கு திருப்பி அனுப்பப்படுபவர்கள் ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் மீளக்குடிய மர்த்தல் திட்டத்தின் கீழேயே அனுப்பப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட போல் சத்தியநேசன் அதுவே அகதிகளுக்கு பாதுகாப்பானது எனத் தெரிவித்தார்.

தமிழ் அமைப்புகளின் அசமந்த போக்குகள் பற்றி கண்டணம் தெரிவித்த போல் சத்தியநேசன் தமிழர் நலன்களுக்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் 2.5 மில்லியன் பவுணுக்கு மேல் ஒதுக்கி உள்ளன (TCHA - 1,192,000; TR-TEC - 420,889; TRC - 411,450 ), அதனால் தமிழ் மக்கள் பெற்றுக் கொண்ட பலன் என்ன எனக் கேள்வி எழுப்பினார். மற்றுமொரு கூட்டத்தில் இந்த தமிழ் பொது அமைப்புகள் மக்களின் நம்பிக்கையை இழ ந்து விட்டதாகக் குறிப்பிட்ட போல் இவ்வமைப்புகள் மக்களுக்கு தம் கணக்குப் பற்றிய முழுவிபரங்களை யும் வெளியிட வேண்டும் என்று தெரிவிதிருந்தார்.

இலண்டனில் தமிழ் அகதிகளுடன் சம்பந்த ப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட அமைப்புகள் இருந்தும் அனைவராலும் கைவிடப்பட்ட நிலையில் இறுதிப் போராட்டத்துக்கு தயாராகும் இந்த தஞ்சம் மறுக்கப் பட்டவர்களுக்காகக் குரல் கொடுக்க அல்லது குரல் கொடுப்பவர்களுக்கு ஒத்துழைக்கு யாரும் முன்வராத தையிட்டு அவர் தன் மனவருத்தத்தை வெளியி ட்டார். இவர்களும் சம்பளத்துக்காக மட்டும் பணி யாற்றும் சராசரிகள் என்ற வகையில் போல் சத்தியநேசனின் பேச்சு அமைந்தது.

கூட்டத்தின் முடிவில் சபையோரின் கேள்வி களுக்கு பதிலளிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் இணைந்து உண்மை நிலையை பிரித்தானிய அரசுக்கு எடுத்துக் கூறி இந்தத் திருப்பி அனுப்புவதைத் தாமதப்படுத்த வேண்டும் என்றும் பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு முன் திருப்பி அனுப்புவதை நிறுத்தக் கோரி போராட்டம் நடத்த வேண்டும் என்றும் சபையில் இருந்து கருத்துக்கள் முன் வைக்கப்பட்டது.□□□□□□□□□□□□□□□□□□

தடுத்து வைப்பதையும் திருப்பி அனுப்புவதையும் நிறுத்தும்படி கோரி தேசம் நடத்திய கையெழுத்துப் போராட்டத்திற்கு பா உ பரி காடினர் அவர்களும் பதில் அளித்து இருந்தார். தேசம் இதழ் 11ல் அம்மடல் பிரசுரமானது. தொடர்ந்தும் இது விடயமாக தொடர்புகொள்ள அவர் தன் விருப்பத்தை வெளிப்படுத்தி இருந்தார். பிறன்ற் நோத் தொகுதியில் வாழ்பவர்கள் அவரின் உதவியை நாட முடியும்.

HOUSE OF COMMONS
LONDON SWIA 0AA



Mr T Jeyabalan
Chief Editor
THESAM - Tamil Community Magazine
PO Box 35806
London
E11 3JX

Our Ref: RH/ THES001 / 021691



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மன் — தமிழ் அகராதியின் ஆசிரியர் திரு கனகசபாபதி சரவணபவன் திருமதி சாந்தினி சரவணபவன் ஆகியோர் இலண்டன் வந்திருந்த போது 30—12—02ல் இடம்பெற்ற கலந்துரையாடலின் தொகுப்பு. — த ஜெயபாலன்.

# தமிழ் அகராதிகள் : மொழியும் மக்களும் தனித்து இயங்க முடியாது

ஐரோப்பிய காலனித்துவப் போக்கினால் 17ம் நூற்றாண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட தமிழ் அகராதிகளின் (dictionaries) உருவாக்கம் தற்போது ஈழத் தமிழர்களின் புலம்பெயர்வுடன் மிகவும் முக்கி யத்துவம் பெற்றுள்ளது. "புலம்பெயர்வும் உயர் கல்வியும் பரந்து வாழும் தமிழர்களுக்கு பல மொழிகளின் அறிவை அவசியமாக்குகின்றன. பல மொழிகளின் தொடர்புகள் தமிழ் உலகிற்கு வளம் சேர்க்கும் ஊற்றுக்கள். அறிவியல் விந்தைகள் புது யுகம் படைக்கின்ற இவ்வேளையில் தமிழ் மொழியும் தமிழ் உலகமும் தனித்து இயங்க முடியாது. பிற மொழிகளில் உள்ள காத்திரமான படைப்புகள் தமிழில் கொண்டுவரப்பட வேண்டும். .........." என்று குறிப்பிடுகிறார் தமிழ் - ஜேர்மன் மொழி வல்லுநர் கனகசபாபதி சரவணபவன்.

2000ல் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலத்தில் கலைஞர் கருணாநிதி சரவணப வனின் ஜேர்மன் - தமிழ் அகராதிக்கு வழங்கிய அணிந்துரையில் "ஈழத்தமிழ் அறிஞர், அன்புச் சகோதரர் திரு கனகசபாபதி சரவணபவன் அவர்கள் 1992இல் ஜேர்மன் - தமிழ் அகராதி ஒன்றையும் 1994ல் தமிழ் - ஜேர்மன் அகராதி ஒன்றையும் உருவாக்கி வெளியிட்டுத் தமிழ் மொழி வளர்க்கிக்கு ஆக்கப்பணி புரிந்துள்ளார்" என எழுதினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் "அண்ணல் விபுலானந்த அடிகளார் வழியில் தமிழ்ச் சமுதாய வளர்ச்சிக்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் இலங்கை நாட்டு யாழ்ப்பாணத் தமிழர்கள் ஆற்றி உள்ள, ஆற்றி வரும் தொண்டுகள் ஆக்கபூர்வமா னவை, கலத்தால் அழியாதவை ......" எனப் பாராட்டியுள்ளார். 1992ல் வெளியிடப்பட்ட ஜேர்மன் - தமிழ் அகராதி 2000ல் 1008 பக்கங்களுடன் மறு பிரசுரம் செய்யப்பட்ட போது வழங்கப்பட்ட இந்த அணிந்துரையிலேயே கலைஞர் கருணாநிதி இக் கருத்தை வெளிப்படுத்தினார்.

இன்று தமிழ் மொழி பேசுபவர்கள் 75ற்கும் மேற்பட்ட நாடுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட மொழி பேசுபவர்களுடன் இணைந்து வாழ்கிறார்கள்.

ஐரோப்பியர்கள் தம் காலனி ஆதிக்கத்தை நிலை நாட்டிய நாடுகளில் தமது அதிகாரத்தை ஸ்திரப்படுத்த அப்பிரதேசங்களின் சுதேசிய மொழி களைக் கற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதற்காக அவர்கள் அகராதிகளை உருவாக்க வேண்டி இருந்தது.



மொழியியல் வல்லுநரும் தமிழ்—ஜேர்மன் அகராதி இன் ஆசிரியருமான கனகசபாபதி சரவணபவன்.

1978ல் தமிழ் அகராதிகளை ஆவணப்படுத் திய ஜேர்மன் ஹிடுல்பேர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த, எ தாமோதரன் 683 தமிழ் அகராதிகளை பதிவு செய்துள்ளார். அவற்றில் 63 பதிவுகள் கையெழுத்துப்பிரதிகள் ஆகும். (A History of Tamil Dictionaries by Gregory James - பக்கம் 298)

Vocabularium Tamulicum (Jafnapatam) - (Jaffna) என்கின்ற அகராதி Ignacio Bruno என்பவரால் 1627ல் கையெழுத்துப் பிரதியாக எழுதப்பட்டு இருந்தது. இது இரண்டாவது தமிழ் மொழி அகரதியாக A History of Tamil Dictionaries by Gregory James இன் நூலில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. ஹென்றிகியூசின் தமிழ்-போர்த்துக்கீச அகராதி முதலாவது அகராதியாகப் பதிவு செய்யப்பட்டு இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் 1505-1656 போர்த்துக்கீசர் காலகட்டத்தில் இந்த அகராதிகள் உருவாக்கப்பட்டு இருந்தது. 1656-1802ல் இலங்கையில் டச்சுக் காலத்தில் டச்சு-சிங்களம்-தமிழ், போர்த்துக்கீஸ்-சிங்களம்-தமிழ்-டசுச், டச்சு-தமிழ் ஆகிய அகராதிகள் உருவாக்கப்பட்டன. 1802 முதல் 1948 வரையான சுதந்திரமடையும் காலகட்டத்தில் இலங்கை ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இருந்தது. ஆனால் 1680இலேயே தமிழ்-ஆங்கிலம், ஆங்கிலம்-தமிழ் அகராதிகளின் கையெழுத்துப் பிரதிகள் உருவாக்கப்பட்டு இருந்தது.

இன்றைய நிலையின் தேவையைப் புரிந்து கொண்டு டச்சு மொழி பேசும் மக்களுடன் புலம் பெயர்ந்து வாழும் 150,000 (அண்ணளவாக) தமிழர்களுக்கு பயன்படும் வகையில் சரவணபவன் தனது ஜேர்மன்-தமிழ் அகராதியைத் தொகுத்து உள்ளார். ஆங்கிலோ-ஜேர்மன் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த டச்சு மொழி ஜேர்மன், நெதர்லாந்து, சுவிஸ்லாந்து, ஆஸ்திரியா, வட பெல்ஜியம், தென் ஆபிரிக்க ஆகிய நாடுகளிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் 2ம், 3ம் மொழியாகவும் பேசப்படுகின்றது.

மத்திய ஐரோப்பிய நாடுகளில் ஆட்சி மொழியாக இருக்கும் டச்சு மொழி அப்பகுதிகளில் வாழும் தமிழர்களின் முதலாம், இரண்டாம் மொழிகளாகத் திகழ்கிறது எனத் தெரிவிக்கும் சரவணபவன் தற்போது ஜேர்மன் மொழியைக் கல்வி மொழியாகக் கொள்ளும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

1979ல் ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்த சரவணபவன் எண்பதுக்களில் ஜேர்மன் - நெதர்லாந்து எல்லைக் காவல் படையின் குற்றத்தடுப்புப் பிரிவில் இணைந்தார். எண்பதுக்களில் ஆரம்பித்த ஈழத் தமிழர்களின் புலம்பெயர்வானது இவரை தஞ்சம் கோருவோருக்கும் ஜேர்மன் அரசுக்கும் இடையேயான ஒரு தொடர்புடகமாக ஆக்கியது. இதுவே தன்னை இந்த அகராதியை உருவாக்கத் தூண்டியதாகத் தெரிவித்தார் சரவணபவன். இவர் ஐபிசி வானொலியில் தமிழ் மூலம் ஜேர்மன் நிகழ்ச்சியைத் தயாரித்து நடத்தி வந்தார். ஆனால் அந்நிகழ்ச்சி இடைநிறுத்தப்பட்டது. அதனால் முக்கியமாக இந் நிகழ்ச்சிக்காகத் தயாரிக்கப்பட்ட பாடநூலாக அமையும் அகராதி மக்களிடம் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்குச் சென்றடையவில்லை என சவவணபவன் சுட்டிக்காட்டினார்.

சரவணபவனின் முயற்சிகளுக்கு முன்னாள் விரிவுரையாளரான அவரது துணைவி சாந்தினி சரவணபவன் மிக்க ஒத்துழைப்பு வழங்கி வருகிறார். தற்போது இத்தமிழ் ஆர்வத் தம்பதிகளின் அடுத்த முயற்சியாக திருமலை மாவட்டத்தின் வரலாறு தொகுக்கப்பட்டு வருகிறது. இந்நூல் பெரும்பாலும் இலண்டனில் வெளியிடப்படும் என சரவணபவன் தெரிவித்தார்.


## Langorf Hotel & Apartments

20 Frognal, Hampstead, London, NW3 6AG

**DO YOU NEED ACCOMODATION IN LONDON ?**

Tastefully Furnished Hotel Bedrooms,

Self Catering Apartments or Flats Suitable for Families or Individuals.

Ten Minutes Away From Oxford Street.

We are pleased to offer 25% discount to any "Thesam" readers wanting accommodation in London.

Tel : 0207 794 4483 Fax : 0207 435 9055

E : langorf@aol.com W : www.langorfhotel.com


தமிழில் தொடர்புகளுக்கு : 0208 732 2712




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு

இளைய அப்துல்லாஹ்



கனவுகளின் உதைப்பில் அனுமேவாடு கரையும்
ஒருவகை சீறுதலிலிருந்து
என்னை பாதுகாக்க பழகிக்கொண்டேன்.
பூமி சஞ்சாரம் மிகக்குறுகியதான
ஒரு சூழலுக்குள் அனாதரவாக அல்லாமல்
நீண்டு நெடுகிய ஒரு பாதையினூடு நடக்கவும்
ஒவ்வொரு உருவமும்
புளகாங்கித இலச்சினைகளுடன்
பயணிக்கும் கல்வெட்டுப் பாதை என்னுடையது.

சரம் சரமாய் கோர்க்கப்பட்ட உள்ளுணர்வில்
இப்பொழுது கனவு வருகுதில்லை.
கரிய இருளும் கவிந்த பூமியும்
அந்தரமாயில்லை
அரூபத்தின் ஆரூடங்கள் பிடிக்கவில்லை.
சுகிக்கவும் சுடரொளி பெருக்கவும்
என்னுள் ஏதாகிலும்
உந்துதல் ஏற்பட்டால் மகிழ்வேன்.
மடையாய் நுரை தள்ளும்
வெள்ளை ஓவியங்கள்
என்றுமே புதியதாக இருக்கிறது.

கோடுகளின் நடுவே நடக்கவும்
இனிமையாக இருக்கின்றது
ஸ்பரிஸம் சீற்றம் ஆறுதல் நித்திரை
எல்லாவற்றுக்கும்
ஒரு உந்துானமான
அர்த்தம் கற்பிக்க ஆறுதலாக இருக்கின்றது.


எல்லாமே நினைவில் சுகமாக
பூமியை விட்டு விட்டு
தூர விலகாமல் இருக்க வேண்டும்.
ஒவ்வொன்றையும்
ஆர்வமாய் பார்க்கிறது மனம்
காதல் கலவி வெண்மை
ஆகாயம் நீலம்
எல்லாவற்றையும் ஒருங்கு சேர......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவன் காதல்

— யுகசாரதி —



மெல்லிராப்போது வான மேக மண்டலத்தின் கண்ணே
வெண்ணிலா ஊரும் சற்றே விசும்பிடை மறையும் - மீண்டும்
எண்ணிலா ஜாலம் காட்டி இதழ்க் கடை முறுவல் கூட்டி
கண்ணினைச் சிமிட்டி நாணிக் களிப்புறு முகத்தைக் காட்டும்.

அவ்விராவதனில் தன்றன் ஆருயிரனையள் தன்னைக்
கவ்விய இதழினூடு களிப்புறச் செய்தான் காளை.

நாணிய பெண்மை அங்கே நகைத்தது - இதழ்கள் தன்னைக்
கோணியே நெளித்து 'உங்கள் குறும்பினை நிறுத்துங்(கோ)'- என்(று)
ஆணிடம் சிணுங்கக் காளை ஆயிரம் சரசம் செய்தான்.

பூமகள் நெற்றிதன்னில் பொலிந்த குங்குமத் தூள் - அன்னான்
மார்பினிற் புரள, கூந்தல் மலர் இதழ் கொட்ட - பெண்மை
சோர்வினிற் துவண்டு வாயின் சொல்லற, முனக - அங்கோர்
காவியம் பிறந்தது, அன்போ காமுறச் சிறந்தது.

இத்தனை நிகழ்வும் யன்னல் இடைவெளியூடே - அந்தப்
புத்தொளி நிலவின் பார்வைப் புலத்தினுள் நடந்தது.
பார்க்கவும் வெட்கிப் பாராதிருக்கவும் மனமிலாது,
வெண்ணிலா ஊரும் சற்றே விசும்பிடை மறையும் - மீண்டும்
எண்ணிலா ஜாலம் காட்டி இதழ்க் கடை முறுவல் கூட்டி
கண்ணினைச் சிமிட்டி நாணிக் களிப்புறு முகத்தைக் காட்டும்.

கலவியிற் கலந்த காதல் காதலிற் கலந்த பாசம்
தலைவியைத் தடுத்திடாது தடுத்தது. - எனினும் அந்தப்

பொன்னொளிர் நிலவின் வீச்சுப் பொலிந்திட - 'ஐயோ! அத்தான்!
என்ன (இது)? வெளிச்சம்! எனக்கேலாது, உடனே அந்த
யன்னலைச் சாத்துங்கோ!' என்றாள். மன்னவன் நிலவைப் பார்த்தான்.

'இருளினிற் கலவி செய்து என்பயன்? - மலர்க் கண்ணாளின்
அருளுறு முகத்தை அங்க அழகினை நிலவு காட்டும்.'

என்றவன் மனதிலெண்ணி, எறித்திடு மதியை நோக்கி,

என்ன டீ! நிலவே! உன்பால் இங்கிதம் இலையோ!- நீ என்
கண்ணவள் முகத்தையொத்த களையினை உடையையாயின்
உன் முகம் பிறர்க்குக் காட்டா(து) ஒளிந்து கொள் - என்று மீண்டும்
பொன் மகள் மேனிதன்னிற் புதைந்தனன் போகம் துய்க்க.

வள்ளுவன் சொன்ன வார்த்தை, வாசுகி கொடுத்த காதல்
தெள்ளிய தமிழில் இங்கே திகழ்ந்தது குறட்பாவாக

'மலரன்ன கண்ணாள் முகமொத்தியாயின்
பலர் காணத் தோன்றல் மதி.' (திருக்குறள் - காமத்துப் பால்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு : குத்துமதிப்பாக எழுதப்படும் ஒன்றல்ல

## எஸ் கெ காசிலிங்கத்தின் - என்னுள் என்னோடு - நூல் ஆய்வு



கி பி அரவிந்தன்
தளநெறியாளர்
அப்பால்-தமிழ்
www.appaal-tamil.com

இந்த நூலின் வெளித்தோற்ற அமைப்பு இதுவோர் வாழ்க்கை வரலாற்று நூல் என்ற மயக்கத்தையே தரக்கூடும். ஆனால் அவரது என்னுரையானது.. "இலங்கை அரசியலில் சிங்கள அரசுகள் திட்டமிட்டு தமிழுரை ஏமாற்றி வருகிறார்கள் என்பதையும், தமிழ்த் தலைவர்களின் தூரநோக்கற்ற பார்வை காரணமாகவே ஈழத்தமிழர் அவலநிலைக்கு தள்ளப்பட்டார்கள் என்பதையும் பதிவு செய்ய வேண்டுமென்ற நோக்கமும் இந்நூல் எழுத என்னைத் தூண்டியது..." என முன்மொழிகின்றது.

இந்த வாக்குமூலத்தை முன்வைப்பதன் மூலம் தன்னை தமிழர் வாழ்வியலிலும், அரசியலிலும் முழுமையாக அர்ப்பணித்தவர் போலவும், அரசியல் வரலாற்று அறிவில் துறைசார்ந்தவர் போன்றதுமான, தோற்றத்தை காசிலிங்கம் ஏற்படுத்துகின்றார்.

இந்த நூலின் உள்ளடக்கம்; பத்திரிகை அனுபவங்கள், அரசியல், புலம்பெயர் வாழ்வியல் என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொருவர் அணிந்துரை வழங்கியுள்ளனர். இவற்றைவிட மேலும் மூவர் அறிமுகவுரை, முன்னீடு எனவும் எழுதியுள்ளனர். இந்த அறுவரும் சூட்டியுள்ள புகழ்ச்சிகளினால் நூலின் ஆசிரியர் எஸ்.கே.காசிலிங்கம் புளகாங்கிதம் அடைந்துள்ளார்.

"........புலம்பெயர்ந்தோர் மத்தியில் மூத்த பத்திரிகையாளரான, எல்லோராலும் தெரிந்து கொள்ளப்பட்டவரான, அனைவரினதும் அன்புக்குமுரியவரான திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் தன் பத்திரிகைத்துறை சார்ந்த அனுபவங்களை நூல் வடிவமாக்கி, பல உண்மைகளை பதிவாக்கியிருப்பது பாராட்டப்பட வேண்டியதும் படித்தறிய வேண்டிய கட்டாயமுமாகும்" என்கிறார் திரு.அரியநாயகம்.

"ஒரு விடுதலை வேள்வியில் குளித்துக் கொண்டிருக்கின்ற ஒரு நாட்டின் இளைய தலைமுறை அறிந்து கொள்ள வேண்டிய, புரிந்து கொள்ள வேண்டிய, உணர்ந்து செயல்பட வேண்டிய முறையில் ஒரு நூல் அமைந்திருக்குமென்றால் ஐரோப்பாவில் மூத்த பத்திரிகையாளராக விளங்கும் திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் யாத்த நூல் என்றே கூறலாம்" என்கிறார் திரு காராளபிள்ளை.

"காசியின் கருத்தோவியங்கள் மேலும் பல வெளிவந்து நம் தமிழர் சிந்தனைக்கு விருந்தாகி எதிர்கால சந்ததியினருக்கு வாழும் மருந்தாகி செழுமை வாழ்வுக்கு உரமூட்ட வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறேன்" என்கிறார் சக்கரவர்த்தி இராசலிங்கம். இன்னும் பல பக்கங்கள் வரை நீளக் கூடியதான வேறு புகழுரைகள் உண்டாயினும் இந்த மூன்றும் போதுமானது என்று நினைக்கின்றேன்.

இப்போது நாம் புத்தகத்தினுள் செல்லலாம். நூலின் 59ம் பக்கத்தில் தொடங்கி 60ம் பக்கம்வரை உள்ளதான இளைஞர்களின் ஊர்வலமும் பொலிஸ் தடையும் என்னும் தலைப்பில் உள்ளதின் ஒரு பகுதியை நாம் பொறுமையாக ஒரு தடவை வாசிப்போம். ".....இப்படி பலவிதமான நெருக்கடிகளை தமிழர் மீது அவ்வப்போது ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டிருந்த வேளையில் *1972ம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி*(1,2) முதந்தடைவையாக கல்வித் திட்டத்தில் பாரிய மாற்றமொன்றை அமுலுக்கு கொண்டு வந்தது.

தரப்படுத்தல் என்ற இத்திட்டத்தின் மூலம் தகுதியுள்ள *தமிழ் மாணவர்கள்*(3) பல்கலைக்கழகம் செல்ல முடியாத ஒரு நிலை ஏற்பட்டது..... இத் திட்டத்தினால் *தமிழ் மாணவர்கள்*(3) அவர்களது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததி சந்ததியாக பாதிப்படையப் போவதைத் தமிழ் மாணவர் சமுதாயம் உணர்ந்து கொண்டவேளையது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த காலத்தில் நிதி அமைச்சராக *திரு பீலிக்ஸ் ஆர்.டயஸ் பண்டாரநாயக்கா*(4) இருந்தார். அவர் நிதி அமைச்சுக் கடமைகளில் மட்டும் கவனம் செலுத்தவில்லை. அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பு முழவதும் அவர் கையில்தான் இருந்த தென்று சொல்லலாம். தமிழருக்கு எப்படி தீங்குகளைச் செய்யலாம் ....... பதியுதின் மஹ்மத் கல்வி அமைச்சராக அப்போது பதவி வகித்தவர்.

தரப்படுத்தல் திட்டத்தை ஆட்சேபித்து *தமிழர் கூட்டணி பாராளுமன்றம்வரை போர்க்குரல் எழுப்பியது*(5) பாடசாலைகள், கல்லூரிகள், பல்க லைக்கழகம் என்ற பாகுபாடின்றி சகல தரத்திலுள்ள மாணவர்கள் ஒரே கொடியின் கீழ் ஒன்று திரண்டு *மாணவர்பேரவை உதயமாகி*(6) தங்கள் ஆட்சேபத் தைத் தெரிவித்தனர்........

*யாழ்ப்பாணம் திறந்தவெளியிலிருந்து ஊர் வலம் ஒன்றை ஆரம்பித்து யாழ்நகர் பிரதான வீதிஊடாக அரசாங்க செயலகத்தைச் சென்றடை ந்து*(7) அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதென மாணவர்பேரவை முடிவுசெய்தது...."

அவருடைய அறிவும் சுவையும் கொண்ட தான இந்த அனுபவ வரலாற்றுப் பதிவை மேலும் நீட்டாமல் இந்த இடத்தில் நிறுத்திக்கொள்வதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்.(பிழைதிருத்த பகுதியில் இந்தப் பக்கங்கள் பற்றி எந்த குறிப்பும் இல்லை.)

## தவறாகப் பதிவு செய்யப்பட்டவை:

1. 1970 தேர்தலில் ஆட்சியமைத்தது தனித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியல்ல. லங்கா சமசமாஜ கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட ஐக்கிய முன்னணியாகும்.

2. தரப்படுத்தல் திட்டம் ஐக்கிய முன்னணி அரசின் கல்வி அமைச்சரான பதியுதின் மொகமட் அவர்களால் ஆட்சி அமைந்த அதே 1970ம் ஆண்டிலேயே அறிவிக்கப்பட்டது.

3. தரப்படுத்தல் திட்டத்தினால் நேரடியாகப் பாதிப்படைந்தவர்கள் குடாநாட்டு மாணவர்களே. கிளர்ந்தெழுந்தவர்களும் அவர்களேயாவர்.

4. சிறிமாவோ பண்டாரநாயக்க பிரமதமராக இருந்த ஐக்கிய முன்னணி அரசில் புகழ்மிக்க நிதி அமைச்சராக இருந்தவர் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த கலாநிதி என்.எம்.பெரெரா.

5. தரப்படுத்தல் திட்டம் அறிவிக்கப்பட்ட காலத்தில் தமிழர் கூட்டணி உருவாகவில்லை. அப்போது தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ், சுயாட்சிக் கழகம் என்பன தனித்தே இயங்கின. தமிழர் கூட்டணி உருவாவதற்கு முன்னரேயே மாணவர் பேரவை உருவாகிவிட்டது.

6. இலங்கை வரலாற்றில் தமிழ் மாணவர்கள் ஒன்று திரண்டது 1970ல் மட்டுமல்ல. 1926ம் ஆண்டுக் காலப்பகுதியில் திரு ஹண்டி பேரின்ப நாயகம், ஒரேற்றர் சுப்ரமணியம், கு.நேசையா போன்றோரின் தலைமையில் இயங்கிய யாழ்ப்பாண மாணவர் காங்கிரசு 1930ம் ஆண்டில் யாழ்பாண வாலிபர் காங்கிரசென மாற்றம் பெற்றது. இது டொனமூர் ஆணைக்குழுவிற்கு எதிராக தீவிரமாக இயங்கியது.

7. தமிழ் மாணவர் பேரவையின் தரப்படுத்தல் திட்டத்திற்கு எதிரான ஊாவலம் 1970ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம் திகதி நடத்தப்பட்டது. இது கொக்குவில் இந்துக் கல்லூரி முன்றலில் இருந்து தொடங்கி யாழ்ப்பாணம் கோட்டை முன்றலில் பொதுக்கூட்டத்துடன் முடிவடைந்தது.

நூலின் நம்பகத்தன்மைக்கு இதற்குமேலும் சான்றுகளை முன்வைக்க வேண்டுமா என்ன? இப்படி வேறு பங்கங்களையும் எடுத்துக்காட்டலாம். இப்படியே நூலைப் படித்தபோது வழுக்களைச் சுட்டும் வகையில் ஓரங்களில் கோடிட வேண்டி இருந்தது. அத்துடன் நண்பர் சி.புஸ்பராசா, யேர்மனி நண்பர்கள் வரன், புத்திசிகாமணி ஆகியோர் குறிப் பிட்டவற்றையும் சேர்த்து கோடிட்டபோது கோடுகளே மிகுந்திருக்கக் கண்டேன். இங்கே அவை எல்லாவற் றையும் சுட்டி எழுதுவது என்பது உங்களுக்கு சலிப்பை ஏற்படுத்தக் கூடும். ஆனாலும் இன்னும் சிலவற்றை மேலோட்டமாகவேனும் தொட்டுக்காட்ட வேண்டி இருக்கின்றது.

1. முக்கிய தமிழர் தலைவர்களில் ஒருவரான அமரர் *அப்பாபிள்ளை அமிர்தலிங்கம்* அவர்களின் முழுப்பெயரை மீண்டும் மீண்டும் *அப்பாக்குட்டி அமிர்தலிங்கம்* என்றே எழுதியுள்ளார்.

2. 1971ம் ஆண்டில் இலங்கையில் ஆயுதக் கிளர்ச்சி செய்த *ஜேவிபி* இயக்கத்தின் பெயரை *சேகுவேரா இயக்கம்* என்றே திரும்ப திரும்ப எழுதுகின்றார்.

3. அன்றைய காலகட்டத்தில் பரபரப்பாக பத்திரிகைகளில் அடிபட்ட *மன்னம்பெரி* என்னும் கதிர்காம அழகியின் பெயரை *வன்னபிரியா* என எழுதுகின்றார்.

4. ஜேவிபியின் தலைவர் ரோகணவிஜயவீர *1971ம்* ஆண்டில் கைதுசெய்யப்பட்டார். ஆனால் அதனை இவர் *1972 பெப்.* என எழுதுகின்றார்.

5. 1974ம் ஆண்டு தமிழாராச்சி மாநாட்டில் *இரா.ஜனார்த்தனம் பேச எழுந்தபோது* பொலிசாரால் →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிஸ் இலக்கிய மாலை : பாலன்குட்டி

அப்பால் தமிழ், முற்றம் சஞ்சிகையின் உதவியுடன் பாரிஸ் நூல் அறிமுக நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தது. 26.01.2002 பாரிசில் "ஒபேவிலியர்ஸ்" எனும் இடத்தில் இந்நிகழ்வு இடம் பெற்றது. இதில் என் செல்வராஜாவின் - நூல் தேட்டம் தர்மகுலசிங்கத்தின் - 'பாட்டி எனும் டெனிஸ் மொழியில் இருந்து தமிழுக்கு மாற்றப்பட்ட கதைகளின் தொகுப்பும் அறிமுகப்படுத்தப்பட்டன. முற்றம் சஞ்சிகையின் ஆசிரியர் இசிதோர் பெர்னான்டோ தலைமையேற்று நிகழ்ச்சியை நடாத்தினார்.

முதல் நிகழ்வாக நூல் தேட்டத்தின் அறிமுகவுரையை கி.பி.அரவிந்தன் வழங்கினார். அவர் தம் உரையில் ஈழத்தில் தமிழ் நூல்கள் எழுதும் வரலாறு 13ம் நூற்றாண்டுகளின் பின்னர்தான் எழுந்தது என்னும் இலக்கிய வரலாற்றாசிரியர்களின் கூற்றை எடுத்துக்காட்டினார். அவர் தன் அறிமுக உரையில் தாளில் அச்சாகி நூலென வெளிவருவன எல்லாவற்றையும் பதிவு செய்தல் சரிதானா? அவற்றிற்கு ஒரு தணிக்கையை நீங்கள் மேற்கொள்ள மாட்டீர்களா? என்ற கேள்வியை செல்வராஜாவிடம் விட்டார். நூலகருக்கு ஒரு தார்மீக பொறுப்பு இருக்கின்றது. நூலகர் விமர்சகரோ தரக்கட்டுப்பாட்டாளரோ அல்லர். நூல்களை வகைப்படுத்துவதும் பதிவுசெய்வதும் ஆவணப்படுத்தலும்தான் அவரது பணி. ஆனாலும் இங்கு வரும் நூல்கள் சிலவற்றைப் பார்க்கும் போது கவலை தருகின்றது. நம்மவர் பலருக்கும் ஒருவகை அடையாளச் சிக்கல் இருப்பது தெரிகின்றது. அதனால் நூல்கள் என்ற பெயரில் அவர்கள் தங்கள் பெயர்களில் சிலவற்றை வெளியிடுகின்றார்கள் என்று தனது ஏற்புரையில் செல்வராஜா பதிலளித்தார். அவர் தொடர்கையில் இதனைக் கவனிக்கும் பொறுப்பு இலக்கியவாதிகளுக்கும் விமர்சகர்களுக்கும் சமூக ஆர்வலருக்கும் உரியது என்றார்.

இரண்டாவது நிகழ்வான பாட்டி நூல் தொடர்பான அறிமுக உரையில் கலாநிதி. அ.முருகையன் எந்தச் சமூகத்தினராக இருந்தாலும் புலம்பெயர்ந்து அவர்கள் அந்நிய நாடொன்றில் வாழ நேரிடும்போது அவர்கள் தங்கள் தாய் மொழியை இழந்து போய் விடுவார்கள் என்பதை மலேசியாவில், சிங்கப்பூரில், தென்னாபிரிக்காவில், மொரிஸியசில் என அடையாளம் காட்டித் தெரிவித்தார். மலேசியாவில் ஓரளவு தமிழிலக்கியம் வளர்ந்திருக்கிறது. ஆனால் மொரிஸியஸ் தமிழர்களிடம் மொழி இழந்துபோய் விட்டது பண்பாடு மட்டும் ஒட்டிக்கொண்டிருக்கிறது எனக் குறிப்பிட்டார். புலம்பெயர்வாழ்வில் மொழியும் பண்பாடும் மிகமுக்கியமானது. மொரிஸியசில் அதற்கான முயற்சிகளைத் தமிழ் ஆர்வலர்கள், கல்விமான்கள் மேற்கொண்டார்கள். அவர்கள் தமிழ் பண்பாட்டை அம் மக்களிடம் அவர்கள் பேசும் மொழி மூலமே கொடுத்தார்கள் என்று முருகையன் தன் உரையில் தெரிவித்தார்.

தர்மகுலசிங்கத்தின் முயற்சி மற்றைய மொழிகளிலிருந்து நமது மொழிக்கு வளம் சேர்ப்பதாய் இருக்கிறது. அவர்களுடைய கலை, பண்பாட்டை எமக்குணர்த்துவதாய் இருக்கிறது. அன்று தமிழ் சமூக நிலையிலும் தமிழ் மொழி நிலையிலும் - பிரஞ்சு - ஆங்கிலம் - தமிழ், ஜேர்மன் - ஆங்கிலம் - தமிழ், சமஸ்கிருதம் - ஆங்கிலம் - தமிழ் என்றே மொழிபெயர்ப்பு இருந்தது. இன்றைக்கு எமது தமிழ்ச்சூழல் மாற்றமடைந்துவிட்டது. நேரடியாக அதன் ஆன்மாவை இடம்பெயர்த்துகின்ற மொழிபெயர்ப்புக்கு நாங்கள் வந்துவிட்டோம் என்பதை அவர் கோடிட்டுக்காட்டினார். இலக்கிய மாலையாக இந்நிகழ்வு அமைந்தது.□□

→

கலவரம் ஏற்படுத்தப்பட்டது என்ற தோரணையில் காசிலிங்கம் எழுதிச் செல்கின்றார். ஆனால் திருச்சியை சேர்ந்த பேராசிரியர் ***நயினார் முகமது அவர்கள் பேசிக் கொண்டிருந்த போதே*** அந்த கொடிய நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது இரா.ஜனார்த்தனம் மேடையில் இருந்தார்.

தமிழரசுக்கட்சி நடாத்திய அறவழிப் போராட்டத்தை வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் வைத்து மதிப்பிடத் தெரியாத அவரது குருட்டுத்தனம். நான் இப்படியே அடுக்கிக்கொண்டு போகலாம். ஆதலால் இதனையும் இத்துடன் நிறுத்திக்கொள்வதே நல்லது என்று நினைக்கின்றேன். மேலும் இந்நூலிலுள்ளவை முன்னர் இங்கு வெளிவந்த பத்திரிகைகளில் தொடராக வந்துமிருக்கின்றது. அப்போது இவற்றை யாரும் படிக்கவில்லை போல் தெரிகின்றது.

இப்படித் தவறுகளால் நிறைந்து அள்ள அள்ளக் குறையாத ஓர் அட்சய பாத்திரம் போல தவறுகள் நிறைந்தது இந்நூல். இந்த நூலுக்கு பல இடங்களிலும் வெளியீட்டு விழா நடத்தியமையும் புழுகிக்கொண்டமையும் காசிலிங்கத்தின் துணிச்சல் மிக்கதான பத்திரிகைத்தனம் என்றே கூறலாம்.

1970ம் ஆண்டுக் காலப்பகுதி இலங்கையின் அரசியல் வரலாற்றிலும், தமிழரின் சமூக வாழ்வியலிலும் மிக முக்கியமான காலப்பகுதி ஆகும். 1970இன் பின்னான இந்த முப்பதாண்டு கால நிகழ்வுகள் பலவற்றில் நேரடி அனுபவம் கொண்டவர் பலர் இந்தப் புலம்பெயர்ந்த நாடுகள் பலவற்றில் இன்னமும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கினறனர் என்பதனை எஸ்.கே.காசிலிங்கம் போன்றவர்கள் மறந்துவிட்டதும் கூட துணிச்சல்தான்.

வரலாறு போகின்ற போக்கில் குத்துமதிப்பாக எழுதப்படும் ஒன்றல்ல என்பதை காசிலிங்கமும் அவருக்கு புகழ்மாலை சாத்தியவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். □□□□□□□□□□□□□□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்தேட்டம்

என் செல்வராஜா

**உங்கள் நூல்களும் இப்பகுதியிலும் நூல்தேட்டம் தொகுதி 2லும் இடம்பெற விரும்பினால் ஒரு பிரதியை அனுப்பி வையுங்கள்.**

## 44. கவிதைச்சரம்




செ.நாகேந்திரன்.
சென்னை 600017:
மணிமேகலைப் பிரசுரம்,
த.பெ.இலக்கம் 1447,
தணிகாசலம் சாலை, தி.நகர்,
1வது பதிப்பு, 2002.
(சென்னை 94: Script Offset)
112 பக்கம்,
விலை: இந்திய ரூபா 25.
அளவு: 18.5x12.5 சமீ.

இலண்டனில் உள்ள பிரபல்யமான தாபனங்களின் ஆண்டு மலர்களிலும், புதினம், வடலி, நம்நாடு போன்ற புதினப் பத்திரிகைகளிலும் மரைத் தென்றல் மாத சஞ்சிகையிலும் பிரசுரமான கவிதைகளுடன், தீபம் தொலைக்காட்சியில் வாசிக்கப்பட்டுப் பாராட்டுப் பெற்ற கவிதை உட்பட 42 கவிதைகளைக் கொண்ட இது கவிஞரின் ஐந்தாவது கவித் தொகுதியாகும்.

## 45 சுதந்திர வேட்கை

தமிழீழ விடுதலைப் போராட்டம் உள்ளிருந்து ஒரு நோக்கு. அடேல் பாலசிங்கம் (ஆங்கில மூலம்), ஏ. சீ தாசீசியஸ், அன்ரன் பாலசிங்கம் (தமிழாக்கம்)



Fairmax Publishing, P.O.2454,
Mitcham, Surrey, CR4 1WB,
1வது பதிப்பு, ஆகஸ்ட் 2002.
(The Print, 45c, Crusoe Road,
Mitcham, Surrey, CR4 3LJ)
480 பக்கம், புகைப்படத் தகடுகள்,
அளவு: 20.5x14 சமீ.
ISBN 1 903679 02 8

திருமதி அடேல் பாலசிங்கம் ஆங்கில மொழியில் எழுதிய Will to Freedom என்ற நூலின் தமிழாக்கமான இந்நூல் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வாழ்வினை உள்ளிருந்த பார்வையாக, ஆழமாகத் தரிசிக்கின்றது. சுயதரிசன விவரணமாகவும், வரலாற்று நோக்குடனும் எழுதப் பட்ட இந்த நூலில் விடுதலைப்புலிகள் பற்றி இது வரை வெளிவராத பல்வேறு தகவல்கள் தரப்பட்டு உள்ளன. கடந்த 20 ஆண்டுக்காலமான தமிழீழ சுதந்திரப் போராட்டத்தின் படிநிலை வளர்ச்சியில் நிகழ்ந்த முக்கிய வரலாற்று நிகழ்வுகள் திருப்பங்கள் இந்நூலில் துல்லியமாகக் காட்டப்பட்டுள்ளன. அவுஸ்திரேலியரான திருமதி அடேல் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றுபவர். தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வாழ்ந்து தமிழ் சமூகக் கட்டமைப்புப் பற்றி நன்கறிந்தவர். விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் பற்றியும் யாழ்ப்பாணச் சமூக சீதன முறை பற்றியும் நூல்கள் எழுதியுள்ளார்.

## 46 சுவடி ஆற்றுப்படை


நான்காம் பாகம்.



எஸ்.எச்.எம். ஜெமீல்.
கல்முனை:
இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம், சாய்ந்தமருது,
1வது பதிப்பு, ஜனவரி 2001.
( Madras 600001: Threeyem Exports, 83 Angappa Naick St)
136 பக்கம்,
விலை: இந்திய ரூபா 200.
அளவு: 18x12.சமீ.
ISBN 955 96694 2 7

1996-2000 வரையிலான காலப்பகுதியில் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட நூல் விபரங்கள் திகதி ஒழுங்கில் தொகுக்கப் பெற்றுள்ளன. ஆசிரியர் பெயர், நூலின் தலைப்பு, வெளியீட்டாளர் விபரம், பக்கம், விலை ஆகிய தரவுகள் காணப்படுகின்றன.

## 47 மண்ணும் மனிதர்களும்



சை.பீர் முகம்மது - மலேஷியா
முகில் என்டர்பிரைசஸ்,
38, Jalan Selaseh 19,
Taman Selaseh, 68100,
Batu Caves, Malaysia,
1வது பதிப்பு, ஆகஸ்ட் 1998.
(சென்னை 600024: Mitra Publications, 375/10 Arcot Rd)
400 பக்கம், விலை: மலேஷிய ரிங்கிட் 20. அளவு: 18x12 சமீ.

இந்தியா பற்றிய ஆசிரியரின் மீள்தரிசனமாக அமைகின்ற ஒரு பயண நூல் இதுவாகும். இந்திய மண்ணினதும் அதன் நாயக நாயகியரினதும் வரலாற்றினைத் துருவி ஆராய்ந்துள்ளார். அந்த மண்ணின் மதச்சண்டைகளும் படையெடுப்புகளும் சரித்திரப் பின்னணிகளும் காதல் விவகாரங்களும் இலக்கியப் படைப்புக்களும் வீரம் மிகு போர்க்களங்களும், ஆத்மீகம் ஞானம் என்று பல்வேறு கோணங்களையும் இந்நூல் நோக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலிகளின் தலைவரால் மாமனிதராக கௌரவிக்கப்பட்ட நாடகக் கலைஞர் எஸ் திருநாவுக்கரசுவுக்கு வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் முன்னிலையாளருமான விமல் சொக்கநாதன் பொன்னாடை போற்றி கௌரவிக்கிறார். இப்பாராட்டு விழா கிழக்கு இலண்டன் பெனின்சுலா உணவகத்தில் ஜனவரி பிற்பகுதியில் கலைஞரும் சட்டவாதியுமான ஜெ ஜோசப் தலைமையில் இடம்பெற்றது.



ஈழவர் திரைக்கலை மன்றம் ஒழுங்கு செய்த இப்பாராட்டு விழாவில் புலம்பெயர் சினிமா பற்றிய கலந்துரையாடலும் இடம்பெற்றது. புலம்பெயர் சினிமா வளர்ச்சிக்கு குறும் படங்களின் அவசியம் அங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இடமிருந்து வலமாக: குறும்பட இயக்குநர் இ ரகுநாதன், கலைஞர் எஸ் திருநாவுக்கரசு, நாடக மற்றும் புகைப்படக் கலைஞர் சி சாந்தகுணம், ஈழவர் திரைக் கலை மன்றத் தலைவர் ஜெ ஜோசப்


**கவலைகளை களைந்தெறியுங்கள்**

**IMMIGRATION**

அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் - மேன்முறையீடுகள்,
நாடு கடத்தலுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள்,
மனித உரிமை விண்ணப்பங்கள்,
அனைத்து விண்ணப்பங்களுக்கும்

**நீண்டகால அனுபவமும் அண்மைக் காலத்தில் கூடுதல் மேன்முறையீட்டு வழக்குகளில் வெற்றி பெற்ற எமது இயக்குனர் திரு குலேந்திரனை அனுகுங்கள்.**

**Interanational Refugees Organisation**

1083 Garratt Lane
London
SW17 OLN (Tooting Broadway - 2mins from tube)

Tel: 020 8682 4494
020 8682 9480
Mobile : 079 6107 1875
Fax: 020 8682 9922



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியத் தமிழ் இலக்கிய நிகழ்வு

## மலேசியத் தமிழ் நூல்கள்

## கண்காட்சியும் & கலந்துரையாடலும்

காலம் :
சனிக்கிழமை
05 - 04 - 2003
காலை 10:30 - மாலை 06:00

இடம்
Stratford Library Hall
The Grove, Stratford, London E15
United Kingdom



1. ஐரோப்பியத் திரைப்படக் கழகத்தின் தயாரிப்பான 'தோழர்கள்' படப்பிடிப்பில் ஒரு காட்சி படமாக்கப்படுகிறது. எஸ் கெ மைக்கல் திரைக்கதை வசனம் எழுதி இயக்கி உள்ள இக்குறும்படத்தில் 15 கலைஞர்கள் நடித்து உள்ளனர். இப்படத்தின் ஒளித்தொகுப்பு, படத்தொகுப்பு ஆகியவற்றை எஸ் வி ஜெயராஜ் செய்து உள்ளார். நான்கு இளைஞர்களின் வெளிநாட்டு வாழ்க்கையை மையமாக வைத்து இப்படம் உருவாக்கப்பட்டு உள்ளது.



2. ஈஸ்ற்ஹாம் ஹைஸ்ரீற் நோத்தில் இடம்பெற்ற தைப்பொங்கல் விழாவின் ஒரு காட்சி. அதில் கலந்துகொண்ட மேயர் பொங்கல் அருந்தி மகிழ்கிறார். கடந்த ஆண்டு போல் இன மத பேதமின்றி அனைவரும் இணைந்து கலந்து கொண்ட இவ்விழாவை மேயர் தெரு விளக்கேற்றிச் சிறப்பித்தார். ஐரோப்பாவில் நியூஹாம் பகுதியில் மட்டுமே இவ்வாறு பொங்கல் தினம் கொண்டாடப்படுகிறது. தமிழர் தகவல் நடுவமும் தமிழ் வர்த்தக சமூகமும் இணைந்து இவ்விழாவை நடத்தின.



3. ஏப்ரல் 5 - மலேசியத் தமிழ் இலக்கிய நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவின் சந்திப்பு பெப்ரவரி 9ல் இடம்பெற்றது. தேசம் சஞ்சிகையின் ஆதரவில் இடம் பெறும் இந்நிகழ்விற்கு கெ ஹரிகிருஷ் ணன், பி சகாதேவன், சையட் பீர் முகம்மது, சி எம் அண்ணாத்துரை ஆகிய மலேசியத் தமிழ் அறிஞர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ள உள்ள னர். இவர்களுடன் யாழ் ஆயர் ஜெப நேசன், பாரிஸ் அப்பால் தமிழ் தள நெறியாளர் அரவிந்தன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org